ISSN 1391-9504




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொழும்புக் கோட்டையின் உரிமை ஆங்கிலேயர் வசம்

மதகுருமார்களுக்கு தத்தமது சமய நடவடிக்கைகளை மேற்கொள்ள இடமளித்ததோடு, அதனை ஒல்லாந்த வர்த்தக சங்கத்தால் வழங்கப்பட்ட சம்பளத்துடன் மேற்கொள்ளவும் ஆங்கிலேயர் அனுமதித்தனர். அவ்வாறே, ஒல்லாந்த வர்த்தக சங்கத்தில் சேவையாற்றுபவர்களின் கணக்கு வழக்குகளைப் புத்தகத்தில் முறையாக எழுதி முழுமையாகப் பூர்த்திசெய்ய சந்தர்ப்பம் வழங்கினர். அதற்குரிய சம்பளத்தை அவர்களுக்கு வழங்கும்படியும் ஆணையிட்டனர். தீர்க்கப்படாத அனைத்து வழக்குகளையும் ஒரு வருடத்திற்குள் தீர்த்துவைக்க வேண்டும் என்றும்

அவர்களின் காணி, வீட்டுறுதி, ஆவண உறுதி மற்றும் இறுதி விருப்ப உயில் ஆகிய பத்திரங்களை செல்லுபடியற்றதாக்குவதில்லை எனவும் தீர்மானித்தனர். ஒல்லாந்த அரசால் வெளியிடப்பட்ட ரூபா நோட்டுக்களில் ஐம்பதாயிரம் தங்கப் பவுண் பெறுமதியான ரூபா நோட்டுகளுக்கு ஆங்கில அரசு பொறுப்பெடுப்பதாகவும் அவர்கள் சிலாபத்திலிருந்து மாத்தறை வரையிலான காணிகளுக்கு உரிமை கொண்டாடும்வரை, நூற்றுக்கு மூன்று வீத வட்டி அறவிடுவதற்கும் தீர்மானித்தனர். அதனை ஒல்லாந்தருக்கு கையளித்தால் அதுகுறித்த பொறுப்புகளை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் ஒல்லாந்தர் கொழும்பு மற்றும் கொழும்பைச் சேர்ந்த களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய இடங்களையும் அங்குள்ள அனைத்துப் பொருட்களையும் அரசுக்குச் சொந்தமான காணி, வளவு, தோட்டங்களையும் மற்றும் கப்பல்கள் அவற்றில் இருந்த அனைத்துப் பொருட்களையும் கையளிக்க இணக்கம் தெரிவித்தனர்.

கி.பி.1766 பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி, இந்த நிபந்தனைகள் நடைமுறைக்கு வந்தன. ஒல்லாந்தின் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் நிலபுலன்கள் அனைத்தும் எவ்வித யுத்தமும் இன்றி செலவுகள் எதுவுமின்றி கண்டி மன்னனின் இடையூறுகள் இல்லாமலும் (ஆங்கில) பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் கைப்பற்றிக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்றப்பட்ட 4,000 ஆசிரியர்கள் சேவையில் இணைக்கப்படுவர்

### கல்வித்துறை அமைச்சர் தெரிவிப்பு



கல்வி அமைச்சினால் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்ற ஆயிரம் பாடசாலைகளில் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்காக, 4000 ஆசிரியர்கள் கடந்த வருடம் முதல் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர் என கல்வித்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த பயிற்சிகள் நிறைவடைவதையடுத்து, அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்ற மேற்படி பாடசாலைகளில் இந்த வருடத்தில் அவர்களை ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாடெங்கிலும் டெங்கு தீவிரம்

இந்த வருடத்தின் (2012) முதல் பத்து நாட்களுக்குள் நாடெங்கிலும் இருந்து 193 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதோடு, 5



பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.


அத்துடன், நாடளாவிய ரீதியில் தற்போதளவில் டெங்கு தீவிரமாகப் பரவும் அபாயம் நிலவுவதனால், கடந்த 16 ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 22 ஆம் திகதி வரையான காலப் பகுதியை டெங்கு ஒழிப்பு வாரமாக சுகாதார அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது.

## 2011 ஆம் ஆண்டு:

# எலிக்காய்ச்சலால் 6,589 பேர் பாதிப்பு

கடந்த 2011 ஆம் ஆண்டில் எலிக்காய்ச்சலினால் நாடுபூராகவும் 6,589 பேர் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் அவர்களில் 89 பேர் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் அறிக்கை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கடந்த வருடம் குருநாகல்




மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே, எலிக்காய்ச்சலினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருந்தனர் எனத் தெரியவந்துள்ளது. இந்த மாவட்டத்தில் கடந்த வருடத்தில் மாத்திரம் 1,573 பேர் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களில் 11 பேர் உயிரிழந்துள்ளதாக அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. குருநாகல் மாவட்டத்தை அடுத்து இரத்தினபுரி, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, கொழும்பு, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலிருந்து அதிகளவு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளதாக அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## யாழ். பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

டெங்கு நோய் அபாயம் பல இடங்களிலும் நிலவி வருவதனால், அதனைக் கட்டுப்படுத்தும் முகமாக, பாடசாலைகளில் சுகாதார நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களினூடாக, பாடசாலை அதிபர்களுக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

மாணவர்களின் ஒத்துழைப்புடன் ஒரு வாரத்தில் மூன்று நாட்களுக்கு பாடசாலை சுற்றுச் சூழலை சுத்தம் செய்யும் பணிகளை மேற்கொள்ளுமாறு அக்கடிதத்தில் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், யாழ். பாடசாலைகளில் தற்போதளவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறியக்கிடைக்கின்றது.

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

## புலமைப்பரிசில் பரீட்சை: சித்தியடைந்தோருக்கு பாடசாலைகளில் அனுமதி

2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை, அனுமதித்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் தரம் 6 இல் கல்வி கற்பதற்காக சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கையை இம்மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.



புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் மற்றும் பெற்றோரின் விருப்பம் என்பனவற்றின் அடிப்படையில், 2012 ஆம் ஆண்டில் தரம் 6 இற்கு அனுமதியைப் பெறுவதற்காக தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெயர்கள், தற்போதளவில் அந்த மாணவர்களை அனுமதித்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## பாடசாலைகளில் மதிய உணவு வேலைத்திட்டம் ஆரம்பம்

நாடுபூராகவுமுள்ள சகல அரசாங்கப் பாடசாலைகளிலும் 2012 ஆம் ஆண்டுக்கான மதிய உணவு வழங்கும் வேலைத்திட்டம் இம்மாதம் 19 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையிலான ஏற்பாடுகளை கல்வி அமைச்சின் உணவு மற்றும் போஷாக்குப் பிரிவு மேற்கொண்டு வருவதாக அறியக்கிடைக்கின்றது.

அதன்படி, இம்மாதம் 19 ஆம் திகதி நாட்டின் சகல பாடசாலைகளிலும் ஒரே நேரத்தில் இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைக்குமாறு



கல்வி அமைச்சு அறிவுறுத்தல் விடுத்துள்ளது. இதற்கான தேசிய நிகழ்வு வடமராட்சி சிவகுரு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக மேலும் அறியக்கிடைக்கிறது.


முன் அட்டையில் வாசகர் முகம்

'விஜய்' முன் அட்டையில் இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர்
**பாத்திமா ரிஷாதா**
மருதானை, கொழும்பு -10.

G.C.E. O/L இன் பின் உங்கள் அடுத்த இலக்கு என்ன? கல்வியை தொடர்வதா ? அல்லது தொழிலா?
30 நாட்கள் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-2227711 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம்மை அறியாமலேயே வருடமொன்று கழிந்துவிட்டது. இன்னும் செய்ய வேண்டிய வேலைகளோ ஏராளம்! நிறைய வேலைகள் நிறைவடையாமல் அப்படியே இருக்கின்றன" இவ்வாறு எம்மில் பலர் முணுமுணுப்பர். பெரியோர்களுக்கு மாத்திரமல்ல; சிறியோர்களாகிய உங்களுக்கும் இந்த நிலை ஏற்படலாம். ஏன் நாம் ஒவ்வொரு வருட இறுதியிலும் இவ்வாறு அங்கலாய்க்கின்றோம்; கவலைப்படுகின்றோம். எந்தவொரு ஒழுங்கமைப்போ, திட்டமிடலோ இல்லாமல் நாம் செயற்பட்டால், இத்தகைய ஒரு நிலையும் அதனால் கவலையும்தான் மிஞ்சும். வருடமொன்றின் இறுதியில் கடந்து போனவற்றைப் பற்றி நினைத்து வருந்துவதைவிட, அதில் கிடைத்த அனுபவங்களை மட்டும் மனதில் நிலைநிறுத்தி மலர்ந்துள்ள புத்தாண்டை நல்லமுறையில் எதிர்கொள்வதே சாலச் சிறந்ததாகும். அத்தோடு, காலத்தின் கட்டாயமும் ஆகும். எனவே, 2012 ஆம் ஆண்டில் உங்கள் வாழ்வை வெற்றிப் பாதையில் செப்பனிட சின்னஞ்சிறியவர்களாகிய உங்களுக்கு இதோ சில ஆலோசனைகள்:



# புதிய வருடத்தில் திட்டமிடலுடன் செயற்படுவோம்

### மிக முக்கியமான நேர அட்டவணை

நேரத்தை முகாமைத்துவப்படுத்தி சரியான நேரத்தில் சரியான முறையில் இயங்குவதற்கு நேர அட்டவணை மிக முக்கியமானதாகும். இதன்படி, இவ்வருடம் நேர அட்டவணைப்படி இயங்கப் பழகிக்கொள்ளுங்கள். நீங்கள் தயாரிக்கும் அந்த நேர அட்டவணையில் கீழ் குறிப்பிட்டுள்ள சில விடயங்களை இணைத்துக் கொள்ளுங்கள். உங்களின் நாளாந்த செயற்பாட்டினிடையே அநாவசியமான வேலைகள் இருப்பின், அவற்றை நீக்கிவிடுங்கள். அத்தியாவசியமான வேலைகளுக்காக குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள். நீங்கள் தயாரிக்கும் நேர அட்டவணையில் நீங்கள் ஆயத்தமாவதற்கு, உடல் சுத்தத்தைப் பேணுவதற்கு, விளையாடுவதற்கு, ஓய்வெடுப்பதற்கு, பாடங்கள் படிப்பதற்கு, தொலைக்காட்சிப் பார்ப்பதற்கு, வீட்டு வேலைகளில் பெரியோர்களுக்கு உதவுவதற்கு, பொழுதுபோக்கு விடயங்களில் ஈடுபடுவதற்கும் என உரிய நேரங்களை ஒதுக்கிக் கொள்ளுங்கள்.

### ஓய்வுக்கும் விளையாட்டிற்கும் இடம் கொடுங்கள்

சிறந்த கல்விமட்டத்தை அடைவதற்காக கல்வி நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்துவது பிள்ளைகளின் பொறுப்பாகும். அதேவேளை, பரீட்சையை நோக்காகக் கொண்டு கல்விகற்கும் முயற்சியில் பலர் ஈடுபடுவர். இந்நோக்கத்தை அடைவதற்காக குறுகிய காலகட்டத்தில் அதிகமாக, தொடர்ச்சியாக கல்வி நடவடிக்கையில் ஈடுபடுவதால் உளரீதியான பாதிப்புகளுக்கும் உடல்ரீதியான உளைச்சல்களுக்கும் நாம் உட்படுவதற்குக் காரணம் நமது அறியாமையேயாகும். எனவே, எமது வாழ்க்கையை இலகுவாக்கிக்கொள்ளும் பொருட்டு ஓய்வும் விளையாட்டும் அத்தியாவசியமானதாகும். நாளாந்த செயற்பாட்டை இலகுவாக மேற்கொள்வதற்குத் தேவையான உடல் மற்றும் உள அழுத்தங்களைக் குறைக்க ஓய்வு நமக்கு பேருதவி புரிகின்றது. உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்துவதற்கும் திறமைகளையும் சமமாக எண்ணும் மனப்பக்குவத்தை வளர்க்கவும் விளையாட்டு நமக்கு பெரும் நன்மை அளிக்கின்றது.



### கோபத்தைக் கட்டுப்படுத்தி, நல்ல குண இயல்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள்

அதிகமான மன அழுத்தம் அல்லது வேலைகளால் நீங்கள் கோபமடையலாம். அத்தகைய கோபம் உங்களின் பல்வேறு செயற்பாடுகளுக்கும் தடையாக அல்லது பாதிப்பாக இருக்கும் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். கடந்த காலங்களில் இத்தகைய இயல்புடன் இருந்தாலும் இப்புதிய வருடத்தில் அதனை கைவிட்டு நீங்கள் புதிய மனிதராக உருவாகுங்கள். வீட்டிலும் பாடசாலையிலும் சகோதர சகோதரிகள் மற்றும் நண்பர்களோடு வாய்த்தர்க்கம் அல்லது மோதல்களில் ஈடுபடாதீர்கள். உங்களுக்கு ஏற்படும் ஏதாவதொரு காரணத்தினால் துக்கம், கோபம், பயம், பொறாமை போன்ற உணர்வுகள் ஏற்படின், பெற்றோர்களுடனும் ஆசிரியர்களுடனும் இவ்விடயம் தொடர்பாக மனம் விட்டுப் பேசுங்கள். கலந்துரையாடுங்கள். கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளுங்கள்.

**கோபத்தைக் கட்டுப்படுத்த சில ஆலோசனைகள்:**

- கோபம் ஏற்பட்டவுடன் அவ்விடத்தை விட்டு அகன்றுவிடுங்கள்.
- கோபத்தினால் ஏற்படும் லாப நஷ்டங்கள் குறித்து சிந்தியுங்கள்.
- உங்கள் கவனத்தை வேறு விடயங்களில் திசை திருப்புங்கள்.
- மனதை இலகுபடுத்தும் வகையில் ஓய்வு அல்லது தியானத்தில் ஈடுபடுங்கள்.

### தொலைக்காட்சியிலிருந்து தூர விலகுங்கள்

தொலைக்காட்சி பல்வேறு விடயங்களில் எமது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளது. எனினும்,தொலைக்காட்சி மீதான எமது விருப்பம் அளவோடு இருக்க வேண்டும். மாறாக, தொலைக்காட்சிக்கு அடிமையாகிவிட்டால், அது எமது எதிர்கால பயணத்திற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அதனால், தொலைக்காட்சியை ஒவ்வொரு நாளும் பார்வையிட குறுகியதொரு நேரத்தையே ஒதுக்குங்கள். அத்தோடு. தமக்குப் பொருத்தமான நிகழ்ச்சிகளை மாத்திரம் தெரிவுசெய்யுங்கள். நீண்ட நேரம் தொலைக்காட்சியைப் பார்வையிடுவதால் அது உங்களின் கல்வி நடவடிக்கைகளையும் ஏனைய செயற்பாடுகளையும் பெரிதும் பாதிக்கும். வாசிக்கும் ஆற்றல் அழிந்து போகும். அவதானம், கிரகித்தல், சிந்திக்கும் ஆற்றல் என அனைத்தும் பாதிப்படையும்.

### தன்னைப் பற்றி அறிந்துகொள்ளல்

நம் அனைவரிடமும் பல்வேறு திறமைகளும் ஆற்றல்களும் உள்ளன. அவ்வாறே, பலவீனங்களும் உள்ளன. கடந்த சில வருடங்களில் மேற்கொண்ட உங்கள் நடவடிக்கைகளை ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்த்து மதிப்பீடு செய்துகொள்ளுங்கள். பிறந்துள்ள புத்தாண்டில் தம்மிடமுள்ள திறமைகளையும் ஆற்றல்களையும் கடந்த வருடங்களைவிட அதிகளவு அதிகரிக்க, முன்னேற்ற முயலுங்கள். உங்கள் குறைகளை, பலவீனங்களை நீங்களே இனங்கண்டு அதிலிருந்து விடுபடவும் விலகிச்

(22ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2011, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



மாஹோ அல்-மதீனா மகா வித்தியாலய மாணவனான எம்.அதீக், 174 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



நிஸாத் அஹமட், 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாத்தளை ஸாஹிரா கல்லூரி மாணவனாவார்.



மாஹோ அல்-மதீனா மகா வித்தியாலய மாணவனான எம்.நபீல், 161 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



மாத்தளை ஸாஹிரா கல்லூரி மாணவனான எஸ்.அப்துல்லாஹ், 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எஃப்.அப்ரா, 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாஹோ அல்-மதீனா மகா வித்தியாலய மாணவியாவார்.



பேருவளை ஐ.எல்.எம். ஸம்சுதீன் வித்தியாலய மாணவியான மிஸ்னா, 169 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நிபால்-மப்லா தம்பதியரின் புதல்வியாவார்.



மாஹோ அல்-மதீனா வித்தியாலய மாணவியான எஃப்.ரக்ஸானா, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



பேருவளை ஐ.எல்.எம். ஸம்சுதீன் வித்தியாலய மாணவியான பஸ்ஹா, 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நிசாம்தீன்-பரீதா தம்பதியரின் புதல்வியாவார்.



வெலம்பொடை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவியான ஸைனப், 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், வஜுஹுத்-ரஜப்நிஸா தம்பதியரின் புதல்வியாவார்.



வறகாப்பொளை பாபுல் ஹஸன் மத்திய கல்லூரி மாணவனான ஸகரியா அஹமட், 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நிஸ்தார்-நஸ்ரி தம்பதியரின் புதல்வராவார்.



எஸ்.இன்சாப், 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கு/ஹிஸ்புள்ளாஹ் மத்திய கல்லூரி மாணவனான இவர், சபீயுள்ளாஹ்-ளைபிரா தம்பதியரின் புதல்வராவார்.



எஃப்.மின்ஸா, 175 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி மாணவியாவார்.



களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவியான எஃப்.ஸைனப், 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அன்வர்-பஸ்மியா தம்பதியரின் புதல்வியாவார்.



பேருவளை ஐ.எல்.எம். ஸம்சுதீன் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மப்றித் அஹமட், 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மில்ஹான்-பரீனா தம்பதியரின் புதல்வராவார்.



ஸாரான் ஹஸன், 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவனான இவர், தரூக்-கதீஜா தம்பதியரின் புதல்வராவார்.



கம்பளை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவியான ரிமாஸா பானு, 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ரவுஸ்தீன்-ருஸானா தம்பதியரின் புதல்வியாவார்.



மாத்தளை ஸாஹிரா கல்லூரி மாணவனான எம்.ஷாபி, 168 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



கம்பளை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவியான எஃப்.ரிகாஸா, 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பௌசுல் கபீர்-தணீனா தம்பதியரின் புதல்வியாவார்.



எம்.ஸப்வான், 167 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாத்தளை ஸாஹிரா கல்லூரி மாணவனாவார்.



அ/கடவத் றத்மலை முஸ்லிம் வித்தியாலய மாணவனான எம்.பஸ்னி, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், றபாய்தீன்-ஹலீமா தம்பதியரின் புதல்வராவார்.

## கல்வி

### முகாமைத்துவம் - 90

### கற்றலுக்கான ஆலோசனைகள்

# நல்ல உணர்வுகளை வளர்த்திடுவோம்!

**மனித உணர்வுகள், ஒருவரது நிலையை அளவீடு செய்யவும் வாழ்க்கையை மதிப்பீடு செய்யவும் உதவுகின்றன. உணர்வுகளால் உருவாக்கப்பட்டவனே மனிதன். அவ்வாறு உருவாக்கப்பட்ட மனிதனின் உணர்வுகள் நல்லனவாகவும் தீயனவாகவும் இருக்கும்.**




எமது செயற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதில் 'உணர்வுகள்' பெருமளவில் தாக்கம் புரிகின்றன. அந்தவகையில், எமது உணர்வுகளுக்கேற்பவே, எமது செயல்கள் நிலைநாட்டப்படுகின்றன. எனவே, உணர்வுகளை நல்லனவாக அமைத்துக்கொள்ளும் பொறுப்பு எம்மில்தான் தங்கியுள்ளது.



### கல்வியில் உணர்வுகளின் செல்வாக்கு

'கல்வி' என்பது ஒரு புனிதமான செயற்பாடு ஆகும். அதனை சிறப்பாகக் கற்றுக்கொள்வதற்கு, உணர்வுகளது செல்வாக்கு மிக மிக அவசியமாகின்றது. சிறப்பான உணர்வுகளோடு நாம் தொழிற்படும்போது, நம்மை அறியாமலேயே எமது செயற்பாடுகளும் அதற்கேற்றவாறு அமையும்.





### தீய உணர்வுகளுக்கு இடமளிக்காமை

உள்ளமானது எப்போதும் தூய்மையானதாகவும் தெளிவானதாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான், நாம் தீய உணர்வுகளால் பீடிக்கப்படாமல் நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளலாம். சில மாணவர்கள் தகாத நட்பாலும் அறிவு பேதலிப்பதாலும் வயதுக்கோளாறாலும் தீய உணர்வுகளில் நாட்டம் கொள்கின்றனர். இதன்போது, அந்த தீய உணர்வுகள் அவர்களது உள்ளத்தை முழுக்க முழுக்க சூழ்ந்துகொண்டு, நல்ல உணர்வுகளின் பக்கம் செல்ல விடாது அவர்களைத் தடுத்துவிடுகின்றன. இதனால், மாணவர்களால் புதிய உணர்வுகளைச் சிந்திக்க முடியாமல் இருக்கும். நல்லவற்றின்மீது தவறான எண்ணம் கொண்டிருப்பதோடு, அவற்றில் வெறுப்புக் காட்டுவர்.

எனவே, இவ்வாறான விளைவுகளை தடுக்கும் முகமாக, தீய உணர்வுகள் எம்மைத் தீண்டும்போது, அவற்றின் பின் விளைவுகளைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அத்துடன், குறிப்பிட்ட விடயத்தை அல்லது இடத்தை விட்டு அகன்றுவிட வேண்டும். நல்ல நண்பர்களுடன் நட்புக்கொள்ளல், அறிவை வளர்க்கும் நூல்களை வாசித்தல், மத வழிபாடுகளில் ஈடுபடல் போன்ற நல்ல விடயங்களில் ஈடுபடலாம். இதனால், நமது உணர்வுகள் நல்லவையாக அமைவதோடு, நாமும் புத்துயிர் பெற்றவர்களாகத் திகழ்வோம்.

தீய உணர்வுகள் எப்போதும் நட்டத்தையே ஏற்படுத்தும். ஆனால், நல்ல உணர்வுகளோ எமது சிந்தனையையும் நடத்தையையும் செயற்பாட்டையும் தூசி துடைத்துத் தூய்மைப்படுத்தக்கூடியதாகவே அமையும். எனவே, பாடசாலை மாணவர்கள் எப்போதும் நல்லவற்றின் பக்கமே தமது கவனத்தைச் செலுத்த வேண்டும். இளமையிலிருந்தே இப்பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தோமானால், எதிர்காலத்தில் சிறந்ததொரு நற்பிரஜையாக மிளிர்வோம் என்பது நிச்சயம்.



(தொடரும்)

-எம்.ஏ.எஃப்.சப்ரானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லொழு… நீங்க…



"மகனே! தூங்கியது போதும். எழுந்து பாடசாலைக்குப் போகத் தயாரா குங்கள், நேரமாகிவிடும்" என ரகுவின் தாயார் ரகுவைத் தட்டி எழுப்பியபோதும், "முடியாது அம்மா' இன்று மழை பெய்வதால் உடம்புக்கு ஒரே அலுப்பாக இருக்கின்றது" என்று கூறிய ரகு திரும்பிப் படுத்துக்கொண்டான். எனினும், தாயார் மீண்டும் தட்டியெழுப்பி, "அப்படிச் சொல்லக்கூடாது மகனே! நல்ல பிள்ளைகள் ஒருபோதும் சோம்பல் கொள்வதில்லை. இதோ உனது நண்பனும் வந்துகொண்டிருக்கின்றான். எழுந்திரு" என்றார் அம்மா. ஒருவாறாக ரகுவும் நண்பன் வாசுவும் பாடசாலைக்கருகே சென்றிருந்தபோது, அங்கோ பாடசாலை வாயில் மூடப்பட்டிருந்தது.

"இன்று ஆசிரியையிடம் அதிகமாகத் திட்டு வாங்க வேண்டியது தான்" என ரகு கூறியதும், "என்ன செய்வது நமது தவறுதான்" என வாசு பதிலளித்தான். பின்னர் இருவரும் பின்னால் இருந்த சிறிய வாயிலூடாக வகுப்பறைக்குள் நுழைவதை ஆசிரியை கண்டுவிட்டார். உடனே அவர் அவர்களிடம், "நீங்கள் வகுப்புக்கு வரத்தாமதமாகியி ருக்கலாம் அதற்குக் காரணமும் இருக்கலாம் எனினும், ஆசிரியரும் வந்தபின்னர் இவ்வாறு நீங்கள் வருவது தவறாகும்" என்றார். அதனால், ரகுவும் வாசுவும் ஏனைய மாணவர்களின் முன்னிலையில் அவமானத் துடன் தலைகுனிந்தனர். பின்னர் ஆசிரியையிடம் மன்னிப்புக் கோரி னார். அதற்கு அவர், "சரி நீங்கள் இருவரும் சென்று வகுப்பில் அமர லாம்" என அனுமதித்தார். பின்னர் ஆசிரியை "நாம் பாடத்தை ஆரம்பிப் போம்" என்று கூறி, "இன்றைய பாடம் சமூகத்தில் ஒழுக்கமுடைய வராக வாழ்வதெனில் எம்மிடம் அமையவேண்டிய நற்குணங்கள் எவை என்பதேயாகும்.

ஒழுக்கமுடையோர் எனும் சொல் உயர் அர்த்தத்தைக் கொண்டதா கும். அது குறுகிய சொல்லைக் கொண்டதாயினும் அகன்ற விளக்கத் தைக் கொண்டதாகும். சிறந்த நல்லொழுக்கத்தை உடையோர் சமூகத் தில் எவருக்கும் தீங்கிழைக்க மாட்டார்கள். அதாவது, அவர்களால் எவருக்கும் துன்பம் ஏற்படாது. அவர்கள் சமூகத்திற்கோர் முன்மாதிரி யாக வாழ்வார்கள். மனிதர்களை மட்டுமன்றி; மிருகங்களையும் பறவைகளையும் மரஞ்செடிகொடிகளையும்கூட நேசிப்பார்கள். அதுபோன்றே, பிறரை துன்புறுத்தாமை பற்றியும் மனிதர்களுக்கும் ஏனைய ஜீவராசிகளுக் கும் மரஞ்செடிகொடிகளுக்கும் சூழலுக்கும் நாம் எவ்வாறு அன்பு செலுத் துவது என்பன பற்றியும் அனைத்து மதங்களிலும் கூறப்பட்டுள்ளது.

ஒழுக்கமுடைய சிறந்த மனிதன் எப்பொழு தும் ஏனையோருக்கு முன்னுதாரணமாகத் திகழ் வான். ஏதேனுமொரு மதத்தை அனுஷ்டிப்பவனாகவும் அதன்மேல் மிகுந்த பற்றுடையவனாகவும் இருப்பான். அவன் தனது மதத்துக்கு அளிக்கும் மதிப்பைப் போன்றே ஏனைய மதங்களையும் அனைத்து இனங்களையும் மதித்து நல்லுறவு பேணுவான். இத்தகைய அருங்குணமுடையோனை சமூகத்தில் உள்ள அனைவரும் புகழ்வர்" என ஆசிரியை விபரித்துக்கொண்டே போனார். அப்போது உடனே எழுந்து நின்ற ஒரு மாணவன், "அருங்குணங்கள் என்றால் என்ன?" எனக் கேட்டான். அதற்கு ஆசிரியை அவனைப்பார்த்து, "அருங்குணங்களில் ஒன்றுதான் ஒழுக்கமுறைப் பேணுதல் ஆகும். ஒழுக்கமுறை பேணப்படாததற்கு ஓர் உதாரணம்தான் கூட்ட நிகழ்ச்சிக்கு நடுவே எழும்பிப் போவதாகும். வகுப்பில் பாடம் நிகழ்த்துகையில் இடையூறு விளைவிப்பதும் ஒழுக்கமுறை மீறலாகும். மேலும், மதத்தலங்கள், பொது இடங்களில் மட்டுமன்றி; தத்தமது வீடுகளிலும்கூட ஒழுக்கமுறை பேணப்படுதல் அவசியமாகும்" என்று விபரித்தார்.

## முறையாக வாழுங்கள்

நல்லொழுக்கத்தோடும் சூழலுக்கேற்ப வாழ்வதுமே முறை யான வாழ்வாகும். வாழ்விடத்துக்கு ஏற்றவாறு எமது குணாம் சங்கள் அமைய வேண்டும். ஏனையோருடன் ஒற்றுமையாகவும் வீண் தர்க்கங்களில் ஈடுபடாமலும் பொறுமையுடனும் வாழ வேண்டும். எப்பொழுதும் இன்முகத்துடன் இன்சொல் பேசி அயலவர்களுடன் முறையான உறவினை பேண வேண்டும்.

## பணிவு கொள்ளுங்கள்

நல்லவர்களிடம் அடக்கமிருக்கும். அவர் வீணாகத் தன்னைப்பற்றிப் பேசிப்பெருமிதம் கொள்ளமாட்டார். எனினும், இக்கட்டான சந்தர்ப்பங்களை எதிர்கொள்ள நேரிடும்போதும் அவர் தனது கொள்கைகளில் இருந்து சிறிதும் பிறழாமல் மனவுறுதியுடன் இருக்க வேண்டும்.

## நேர்மையுடன் வாழுங்கள்

நேர்மையும் நல்லோரின் பிரதான பண்பாகும். தற்போது சிலர் தமது சுயநலத்திற்காக நீதி, நெறி தவறுகின்றனர். அதாவது பொய் சொல்கின்றனர். பிறரை ஏமாற்றுகின்றனர். இவ்வளவும் தமது சுயலாபத்திற்காகவே செய்கின்றனர். ஆனால், நேர்மையாளர் ஒருநாளும் தனது கருத்தில் இருந்து விலகமாட்டார். நாம் நேர்மையுடன் வாழ்ந்தால் எப்போதுமே இறைவன் எமக்கு துணை நிற்பான்.

## உற்சாகத்துடனும் பொறுப்புடனும் செயற்படுங்கள்

உற்சாகம் மற்றும் பொறுப்பு இத்தகைய தன்மைகள் இரண்டும் இருந்தால்தான் எதிர்கால லட்சியத்தை நோக்கி எம்மால் பயணிக்க முடியும். உதாரணமாக; பரீட்சையில் நாம் சித்திபெற வேண்டுமாயின், முயற்சியுடன் படிக்க வேண்டும். குறிக்கோளை அடைய முடியாமல் போவது ஒருவருக்கு ஏற்படும் பின்னடைவாகும். எனவே, உற்சாகத்தையும் பொறுப்புடன் செயற்படுவதையும் நாம் எமக்குள் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

## பொறுமை காத்தல்

எமது சமூகத்தில் பொறுமை இல்லாமையே சிலருக்கு மத்தியில் பிரச்சினைகள் ஏற்படக் காரணமாகின்றது. குடும்ப ரீதியில் மட்டுமன்றி; கிராமம், நகரம் நாடுகள் எனும் வகைகளி லும்கூட பொறுமை இல்லாமையாலேயே பாதிப்பு ஏற்படுகின்றது. பொறுமையால் மன அமைதி கிடைக்கும் என ஒரு பழமொழி இருக்கின்றது. அதன்படி, பொறுமை ஒரு நல்ல மனிதனுக்கு இருக்கவேண்டிய அருங்குணங்களில் ஒன்றாகும்.

## தர்மம் செய்யுங்கள்

தர்மம் செய்தல்கூட ஒரு நல்ல மனிதனுக்குரிய அடையாளமா கும். ஏழை, எளியவர்கள், இல்லாதோருக்கு எம்மால் இயன்றளவு உதவிகள் புரியவேண்டும். அதாவது, பணம், உணவு, உடை போன்ற எம்மால் முடிந்தவற்றை வழங்குதல் மட்டுமன்றி; யாரேனும் எம்மிடம் ஏதேனுமொன்றைக் கேட்டால் உரிய பதிலை பணிவுடன் கூறுதலும்கூட தர்மமாகும்.

## நற்பெயர் பெறுங்கள்

சிலர் சில நேரங்களில் கொடூர தீர்மானத்தை எடுப்பர். அது நற்குணமல்ல; அதனால், பல சந்தர்ப்பங்களில் பிள்ளைகளும் கூட பெற்றோருக்கு எதிராகவும் ஆசிரியர்களுக்கு எதிராகவும் தீங்கிழைப்பர். எனவே, கொடூர நடத்தை நல்லதல்ல. நாம் எப்போதும் பெற்றோர் ஆசிரியர் மூத்தோர் ஆகியோரிடம் நற்பெயர் எடுக்க வேண்டும்.

## புத்திசாதுர்யமாக இருங்கள்

யாரேனும் ஏதாவது ஒரு காரியத்தை செய்கின்ற போது, அச்செய்கை புத்திசாதுர்யமானதா? இல்லையா? என்பதைப் பாருங்கள். நாம் எடுக் கும் அல்லது எடுக்கப்போகும் அனைத்து முடிவுகளையும் தீர யோசித்து புத்தி சாதுர்யத் துடனேயே எடுக்க வேண்டும். எம்முடைய அவசர முடிவுகள் எமது எதிர்காலத்தையே பாழ டையச் செய்யக்கூடி யவை. ஆகவே நாம் எப்போதும் புத்திசா துர்யமான முடிவு களை யோசித்து எடுப்பதே நல்லது. உயர்வான ஒருவனுக்கு இருக்க வேண்டிய நற்பண்புதான் தமது கொள்கையில் உறுதிகொள்வதாகும். எனவே, சிறியோர் முதல் பெரியோர் வரை மனஉறுதி தன்மையைக் கொண்டிருத்தலும் அவசியமாகும்.

## சூழலை நேசியுங்கள்

சூழலை மாசுபடுத்தினால் உடலில் நோய்கள் ஏற்படுவதோடு, மனோரீதியிலும் பாதிப்புகளும் நேரக்கூடும். எனவே, சூழலைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும் என்பதோடு சூழலை நேசிக்கவும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# க்கம் கொண்டிருந்தால்,
# ள சிறந்த செல்வம்

நாம் எமது சூழலை அசுத்தமாக வைத்திருப்போமேயானால், அதனால், எமது அயலவர்களும் பாதிப்பிற்குள்ளாவர். சுத்தமாக இருப்பது எமது மனத்தையும் தெளிவாக வைத்திருக்க உதவும்.

## நட்புடன் வாழுங்கள்

மிக நெருங்கிய நண்பர் நண்பியரிடமும்கூட சிலவேளை க[illegible] பகைமை ஏற்பட்டுவிடுகின்றது. இதற்கெனச் சில கார[illegible]ங்கள் இருக்கலாம். எனினும், நாம் அனைத்து வகையிலும் பகையின்றி, எல்லோருடனும் நட்புக்கொள்ள முயற்சிக்க வேண்டும். இதன் அர்த்தம் ஏனையோருடன் இணைந்து செயற்படுவதேயாகும். இத்தகைய நட்புறவு இல்லாவிட்டால், சமூகத்தில் வெறுப்புணர்வு, வைராக்கியம், அடிதடிகள் யாவும் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, உயர் பண்பு உள்ளவரிடம் சமூக நட்புறவு இருப்பது அத்தியாவசியமாகும்.

## பரிவு காட்டுங்கள்



நற்பண்புள்ளவரிடம் தயவு, அனுதாபம், பரிவு, மன அமைதி ஆகிய குணங்கள் அமைந்திருக்கவேண்டும். இவை இல்லாவிட்டால், அவர் ஒழுக்கமுடைய மனிதனாக ஆக முடியாது. ஆகையால், அனைவரும் இத்தகைய குணங்களைப் பெருப்பித்துக் கொள்ளவேண்டும். நற்பண்புள்ளவர் எப்போதும் பக்கசார்பின்றியே செயற்படுவார். அவ்வாறே தீர்மானமும் எடுத்துக்கொள்வார். இது பண்புள்ளவரின் உயர்ந்த குணமாகும்.

## பிறருக்காக வாழுதல்

அடுத்தவருக்காகவும் உழைக்கும் பொதுநலச் செயற்பாடே பிறருக்காகவும் வாழுதல் என்பதாகும். எமது நாட்டின் சுதந்திர வீரர்கள் இவ்வாறுதான் உழைத்திருக்கின்றார்கள். அவர்கள் தமக்காக மட்டுமே உழைத்திருந்தால் எமக்கு சுதந்திரமே கிடைத்திருக்காது. ஆகவே, எப்போதும் பிறர் நலனில் அக்கறை கொள்ளுதல் நற்பண்பாகும்.

## பாரம்பரியத்தைக் கௌரவியுங்கள்

தொன்றுதொட்டுக் கடைப்பிடித்துவரும் பழக்கவழக்கங்களை கௌரவிப்பதென்பது ஒருவனிடம் காணப்படவேண்டிய உயரிய குணமாகும். எமது பாரம்பரிய கலாசாரமே எமது சமூகத்தின் கட்டுக்கோப்பைப் பேணிப்பாதுகாக்கின்றது. எனவே, ஒருவன் நற்பிரஜையாக வாழ வேண்டுமெனில், தனது மதத்துக்கும் இனத்துக்கும் கௌரவம் அளிப்பது போன்றே பாரம்பரியத்துக்குக் கட்டுப்பட்டு பழக்கவழக்கங்களையும் பேணவேண்டும்.

## சமாதானம்

சமாதானம் பெறுமதிமிக்க ஒன்றாகும். அதன்மூலம்தான் சமூகத்தில் சகஜவாழ்வு ஏற்படும். சமாதானம் இருந்தால் மோதல்களுக்கு இடமிருக்காது. அதனாலான அழிவுகளும் இருக்காது. பெற்றோர் மத்தியிலும் குடும்பங்களுக்கு மத்தியிலும் பிள்ளைகள் மத்தியிலும் சமாதானம் அவசியமாகும். அயல்வீட்டார், கிராமத்தார், நகரவாசிகள் பல நாடுகளையும் சேர்ந்தோர் ஆகியோரிடமும் சமாதானம் இருக்க வேண்டும். இதன்மூலம்தான் முழு உலகிலும் சமாதானம் நிலவும்.

## ஒற்றுமையாக இருங்கள்

உண்ணப்படும் உணவு, அருந்தப்படும் பானம், அணியப்படும் ஆடை, மனத்தால் அடையும் இன்பதுன்பம் ஆகியவை மட்டுமல்ல; கருத்துக்களும் நல்லவையாக பரிமாறப்பட வேண்டும். ஒற்றுமை இருக்கும் இடத்தில் நிச்சயம் சமாதானமும் இருக்கும். இதுவும் உத்தமர்களிடம் இருக்க வேண்டிய உயர்குணமாகும் என ஆசிரியை தனது விளக்கத்தைக் கூறி முடித்தார். ஆசிரியையின் இந்த அறிவுரைகளை அனைத்துப் பிள்ளைகளுமே செவிமடுத்தனர்.

வகுப்பு முடிந்ததும் ரகு எழுந்து நின்று ஆசிரியையிடம், "நான் இனி எப்போதும் பாடசாலைக்கு வருவதை அசட்டை செய்யமாட்டேன். தாமதிக்கவும் மாட்டேன். உண்மையில் என்னால்தான் வாசுவும் தாமதிக்க நேர்ந்தது. தாங்கள் நடாத்திய பாடம் எமக்குத் தெளிவாகப் புரிந்தது. எனவே, நாங்கள் அனைவரும் இன்றிலிருந்து சமூகத்துக்குப் பயனுள்ளவர்களாக வாழப் பழகிக்கொள்வோம். நாங்கள் எமக்குரிய அருங்குணங்களை எமக்குள் வளர்த்துக்கொள்ள முயற்சி செய்வோம். மிகவும் நன்றி ஆசிரியை அவர்களே!" எனக் கூறினான். இதைக் கேட்டதும் மகிழ்ச்சியுற்ற அந்த ஆசிரியை அனைத்து மாணவ மாணவியர்க்கும் வாழ்த்துகூறியவாறே வகுப்பறையை விட்டும் வெளியேறிச் சென்றார்.

ஏ.ஜே.எம்.நிழாம்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இத்தாலி


கொலோசியம்

**அரசு:** இரு சட்டசபைகளைக் கொண்ட நாடாளுமன்றக் குடியரசு.
**ஐக்கியம்:** 1861 மார்ச் 17; குடியரசானது-1946 ஜூன் 02 ஆம் திகதி.
**தேசிய பெயர்:** ரிபப்ளிக்கா இத்தாலியானா.
**தேசிய விடுமுறை தினம்:** குடியரசு தினமாகிய ஜூன் 2.
**ஜனாதிபதி** (2006): ஜோர்ஜியோ நபோலிட்டானோ.
**பிரதமர்** (2011): மாரியோ மொன்டி.

**ஏனைய முக்கிய நகரங்கள்:** மிலான், நேப்பிள்ஸ், டுரின், பலெர்மோ,ஜெனோவா, புளோரன்ஸ், பாரி, கட்டானியா, வெனிஸ்.
**நாணயம்:** யூரோ (முன்னர் லிரா).
**மொழிகள்:** இத்தாலியன் (உத்தியோகபூர்வ மொழி), ஜேர்மன், பிரெஞ்ச்.


சாய் கோபுரம் -பைசா

## புவியியல்

தெற்கு ஐரோப்பிய நாடான இத்தாலியின் தெற்கில் மத்தியதரைக் கடலும் கிழக்கில் அட்ரியாட்டிக் கடலும் மேற்கில் பிரான்ஸ் நாடும் வடக்கில் சுவிட்சர்லாந்து, ஒஸ்ட்ரியா ஆகிய நாடுகளும் எல்லைகளாக அமைந்துள்ளன. இத்தாலியின் மத்தியில் அப்பினைன் மலையும் வட எல்லையில் எல்ப்ஸ் மலையும் அமைந்துள்ளன. வட இத்தாலியில் மலைகளுக்கிடையே கொமோ, கார்டா, மெக்கியோர் போன்ற ஏரிகள் காணப்படுகின்றன. இத்தாலி பல தீவுகளையும் கரையோரத்தில் பல குடாக்களையும் வளைகுடாக்களையும் கொண்டுள்ளது.





தேசிய இலச்சினை

**மொத்தப்பரப்பு:** 116,305 ச.மைல் (301,230 ச.கி.மீற்றர்).
**நிலப்பரப்பு:** 113,521 ச.மைல் (294,019 ச.கி.மீற்றர்).
**உயர் மலைச்சிகரம்:** பிளேன்க் மலை (4,748 மீற்றர்).
**தாழ் மையம்:** மத்தியதரைக் கடல்.
**மக்கள்தொகை** (2010): 58,090,681.
**தலைநகரமும் பெரிய நகரமும்:** ரோம்.

**இனக்குழுவினர்:** இத்தாலியர்.
**சமயங்கள்:** ரோமன் கத்தோலிக்கம் 90%, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம், சிறியளவில் யூதம் மற்றும் இஸ்லாம்.
**எழுத்தறிவு** (2003): 99%
**இணையத்தள குறியீடு:** .it
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 39
**தேசிய கீதம்**
Fratelli d’Italia,
l’Italia s’è desta,
dell’elmo di Scipio
s’è cinta la testa... என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

கி.மு.2000 ஆம் ஆண்டு முதல் இந்தோ-ஐரோப்பிய மக்கள் இடம்பெயர்ந்து இங்கு வந்து குடியேறத் தொடங்கினர். இக்குடியேற்றம் கி.மு. 1000 வரை தொடர்ந்தது. கி.மு. 264 இல் தென் இத்தாலியில் சிசல்பின் கௌல் என்பவரின் தலைமையின்கீழ் ஆட்சி நடைபெற்றது. கி.பி.800களில் இருந்து பரிசுத்த ரோமானியப் பேரரசின்கீழும் ரோமன் கத்தோலிக்க பாப்பரசர்களாலும் நோர்மன்ஸ், சராசென்ஸ் ஆகியோராலும் ஆளப்பட்டது. அதன்பின், பல்வேறு ராச்சியங்களாக பிளவுபட்டிருந்த இத்தாலி, 1861 இல் ஐக்கியமடைந்தது. ஐக்கிய இத்தாலியின் முதல் மன்னராக விக்டர் இம்மானுவேல் திகழ்கிறார்.முதலாம் உலகப் போரில் நேசநாடுகளுடனும் இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனியுடனும் கூட்டுச்சேர்ந்து, 1922 முதல் 1943 வரை பாஸிஸ்ட் தலைவர் முசோலினியின் சர்வாதிகார ஆட்சிக்குட்பட்டிருந்தது. அதன்பின், நிலையற்ற அரசுக்கு பெயர் பெற்றது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் 65 வருடங்களில் 59 அமைச்சரவைகள் மாறி மாறி அதிகாரத்தில் வந்து சென்றன. 2006 ஏப்ரல் தேர்தலில் மத்திய இடதுசாரி தலைவர் ரொமானோ புரோடி கடுமையான போராட்டத்தின் பின் வெற்றி பெற்றார்.


ஜனாதிபதி


பிரதமர்

## கலாசாரம்

பல்வேறு மாறுபட்ட காலகட்டங்களில் மிக உயர்ந்த கலை, கலாசார, இலக்கியங்களின் இருப்பிடமாகத் திகழ்ந்துள்ளது. 16 ஆம் நூற்றாண்டு வரை மேற்குல கலாசாரத்தின் மையமாக விளங்கியது. 16 ஆம் நூற்றாண்டில் கலை, கலாசார, சிற்ப, சித்திர மறுமலர்ச்சியின் தலைநகராக இத்தாலியின் புளோரன்ஸ் நகரம் திகழ்ந்தது. இத்தாலிய கலாசாரத்தில் எட்ருஸ்கன் நாகரிகம், புராதன ரோம், ரோமன் கத்தோலிக்க தேவாலயம், மனிதப்பண்புகள் என்பன செல்வாக்குச் செலுத்தின.


வரலாற்றுப் புகழ்மிக்க வெனிஸ் நகரின் கால்வாய்

## காலநிலை

நாட்டின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளுக்கிடையே பாரிய காலநிலை வேறுபாடுகள் நிலவுகின்றன. மலைகள் நிறைந்த வட பகுதியில் கோடைகாலத்தில் அதிக குளிர் நிலவும். மாரிகாலத்தில் பொதுவாக குளிராகவும் பனிப்படிவு வீழ்ச்சியும் காணப்படும். இத்தாலியின் கரையோரப் பிராந்தியங்கள் இதமான மாரியும் வெப்பமான உலர் கோடையும் நிலவும்.




## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2005): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 25.049 மில்லியன்; செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்: 71.5 மில்லியன்.
**வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்:** AM 100, FM 460, SW 9.
**தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1995): 358.
**இணையத்தளப் பாவனையாளர்கள்** (2007): 28.855 மில்லியன்.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2006): மொத்தம் 19,460 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்:** 484,688 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து** (2004): 2400 கி.மீற்றர். **துறைகளும் துறைமுகங்களும்:** அகுஸ்டா, ஜெனோவா, லிவொர்னோ, மெலிலி, ரவென்னா, டரன்டோ, டிரிஸ்டி, வெனிஸ். **விமான நிலையங்கள்** (2007): 132.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 26%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** பழங்கள், மரக்கறிவகைகள், கிழங்கு வகைகள், கரும்பு, பீட் வகை, சோயா பீன்ஸ், தானியங்கள், ஒலிவ், மாட்டிறைச்சி, பாற்பண்ணை உற்பத்திகள், மீன் வகைகள். **கைத்தொழில்கள்:** இயந்திரங்கள், புடவை வகைகள், மோட்டார் வாகனங்கள், ஆடைகள், பாதணிகள். **இயற்கை வளங்கள்:** நிலக்கரி, துத்தநாகம், பொட்டாசியம், மாபல், எஸ்பெஸ்டஸ், இயற்கை வாயு, மீன், பயிர்ச்செய்கை நிலம். **ஏற்றுமதிகள்** (2009): புடவை வகைகளும் தைத்த ஆடைகளும், போக்குவரத்து சாதனங்கள், உணவு வகைகள். **இறக்குமதிகள்:** பொறியியல் உற்பத்திகள், ரசாயனப் பொருட்கள், கனிப்பொருட்கள் மற்றும் உலோகங்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2006): ஜேர்மனி, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம், ஸ்பெய்ன், சுவிற்சர்லாந்து, நெதர்லாந்து, பெல்ஜியம், சீனா.


தலைநகரின் வான்வழித் தோற்றம்


உஃபிசி ஓவிய மன்றம்

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

- கொலோசியம்
- சாய் கோபுரம்- பைசா
- ட்ரேவி நீரூற்று
- பொம்பேய் நகரின் எச்சங்கள்.


சென்டா மரியா டெல் க்ரேசி (லியனாடோ டா வின்சியின் 'இறுதி இராப்போசனம்' ஓவியம் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012ஆம் ஆண்டிற்குரிய உலகத் திட்டங்கள்



**1 ஜனவரி:** சீன முறைப்படி 2012 ஆம் வருடம் மக்கராவின் வருடம் என அழைக்கப்படுகின்றது. அது சௌபாக்கியத்தையும் அதிர்ஷ்டத்தையும் குறிப்பதாகக் கருதப்படுகின்றது.

**2** அசர்பைஜான், பாகிஸ்தான், மொரொக்கோ, குவாட்டமாலா மற்றும் டொகோ ஆகிய நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகப்பற்றற்ற அங்கத்துவ நாடுகளாகின்றன.

**3 பெப்ரவரி:** உலகப் புகழ்பெற்ற நாவல் ஆசிரியரான சார்ள்ஸ் டிகன்ஸ் அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடும் முகமாக உலகெங்கும் பல கொண்டாட்டங்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன.

**4** இரண்டாம் எலிசபெத் மகாராணியாகப் பிரித்தானிய அரசியாக முடிசூடி 60 ஆண்டுகள் பூர்த்தியானதைக் கொண்டாடும் வைரவிழாவை நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**5 மார்ச்:** ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புட்டின் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பின்மூலம் ஜனாதிபதி பதவியைப் பெற எதிர்பார்த்துள்ளார்.

**8 மே:** சீனா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் கெனடா ஆகிய நாடுகளில் மண்டல சூரிய கிரகணமொன்றைக் காணலாம்.








**13 ஓகஸ்ட்:** நாஸா நிறுவனத்தின்மூலம் செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட கியூரியோசிட்டி ரோவர் எனும் விண்கலமானது செவ்வாயின் மேற்பரப்பில் தரை இறங்கும்.

**14 செப்டெம்பர்:** ஆப்கானிஸ்தானிலுள்ள 33,000 அமெரிக்க மேலதிக படையினரை அங்கிருந்து நீக்கவுள்ளனர்.

**15 ஒக்டோபர்:** ஒரு தசாப்தமாக ஆட்சியில் தொடர்ச்சியாக இருந்த ஜனாதிபதி ஹியூ ஜின்தாவோ அவர்களை தோற்கடித்த சீன பிரதமர் ஷி ஜின்பின் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் பாரிய மாற்றங்களைக் கொண்டுவர உள்ளார். அன்றையதினம் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியையும் அவருக்கு வெல்லக்கூடியதாக இருக்கும்.





**9 ஜூன்:** எகிப்து தனது புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யவிருக்கிறது.

**10** போலந்து மற்றும் உக்ரைன் ஆகிய இரு நாடுகளும் யூரோ-2012 உதைப்பந்தாட்டப் போட்டிகளை நடத்தும் நாடுகளாக உருவாகியுள்ளன.






**6 ஏப்ரல்:** உலகின் புகழ்பெற்ற 'கடல் பேரழிவு' எனக் கருதப்படும் சோக நிகழ்வாகிய டைடானிக் கப்பல் கடலில் மூழ்கி நூறு வருடங்கள் நிறைவடைகின்றன. அதனை நினைவுகூருமுகமாக 12, பயணிகள் கப்பல்களை அன்றைய தினம் வெள்ளோட்டம் விடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**11 ஜூலை:** லண்டன் மாநகரம் உலகில் மும்முறை ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் பெருமையைப் பெறும் முதலாவது நகரமாகத் திகழ்கின்றது. 1908 மற்றும் 1948 ஆகிய வருடங்களில் மாத்திரமல்லாது; 14 ஆவது பெராலிம்பிக் போட்டியை நடத்தும் நகரமாகவும் திகழ்கின்றது.



**16 நொவெம்பர்:** அமெரிக்காவின் 57 ஆவது ஜனாதிபதி தேர்தலுக்கு பராக் ஒபாமா ஆயத்தமாகி வருகிறார். அவருடன் போட்டியிடும் (ரிபப்ளிக்கன்) குடியரசுக் கட்சியின் வேட்பாளரின் பெயர் இன்னும் வெளியிடப்படவில்லை.




**17** ஃபோமியுலா-1 ஓட்டப்பந்தயம் மீண்டும் அமெரிக்காவில்.







**7** பிரான்சின் நிகொலஸ் சார்கோசின் போட்டியாளரான சோஷலிஸ முன்னணியின் ஃபிரேன்கொய்ஸ் ஹோலண்டே அவர்கள் ஜனாதிபதி தேர்தல் களத்தில்.

**12** மெக்ஸிக்கோவின் முன்னாள் மாநில ஆளுனரான என்ரிகே பெனிஆ நிட்டோ அவர்களே அதிபர் தேர்தலின்போது, மெக்ஸிக்கன் நடுநிலைக் கோட்பாட்டாளர்களின் எதிர்பார்ப்பாக உள்ளார்.

**18 டிசெம்பர்:** தென் ஆபிரிக்காவில் ஆட்சியிலிருக்கும் ANC கட்சி 2014 ஜனாதிபதி தேர்தலுக்கான தகுதியைப் பெறுகின்றது.

இரஞ்சித் ஜெயகர்

Research: Kate Edgley Pictures: Getty Images, Associated Press © GRAPHIC NEWS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வினாத்தாள் - I

பெயர்: ............................................ நேரம்: 45 நிமிடங்கள்


*01 தொடக்கம் 35 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.*

★ *1 ஆம், 2 ஆம் வினாக்களில் முதலாவது உருவுக்குப் பொருந்தக்கூடிய உருவை ஏனைய மூன்று உருக்களில் இருந்து தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.*

01) 

02) 

★ *3 ஆம், 4 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து, வெற்றிடத்தில் வரவேண்டிய நான்காவது உருவைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.*

03) 

1. 2. 3.

04) 

1. 2. 3.

★ *5 முதல் 7 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் முதலில் தரப்பட்டுள்ள கூற்று பிழையானது ஆகும். இந்தக் கூற்று ஏன் பிழையானது என்பதைக் குறிக்கும் விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.*

05) கிழக்குத் திசையில் சூரியன் மறையும்போது வானம் அழகுடன் பிரகாசிக்கும்.

1. ஆகாயம் ஒருபோதும் பிரகாசிக்க மாட்டாது.
2. சூரியன் கிழக்குத் திசையில் மறையமாட்டாது.
3. சூரியன் உதிக்கும்போது வானம் அழகுடன் பிரகாசிக்காது.

06) காலை நேரத்தில் மலர்ந்த பவளமல்லிகைப் பூக்கள் மணம் வீசின.

1. பவளமல்லிகைப் பூக்கள் மணம் வீசாது.
2. பவளமல்லிகை காலை நேரத்தில் மலரமாட்டாது.
3. பவளமல்லிகை வெள்ளை நிறம் உடையதன்று.

07) முயலின் கொம்புகளால் செய்யப்படும் அலங்காரப் பொருட்களின் விலை அதிகமாகும்.

1. அலங்காரப் பொருட்கள் விலை அதிகம் இல்லை.
2. சில இடங்களிலேயே முயலின் கொம்பு கிடைக்கின்றதால்.
3. முயலுக்கு கொம்பு இல்லை.

★ *8 ஆம், 9 ஆம் வினாக்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.*

08) கப்பலுக்கு கடல் போன்று விமானத்திற்கு ........................

1. விமான நிலையம் 2. துறைமுகம் 3. ஆகாயம்

09) வீட்டிற்கு கூரைபோன்று பேனாவுக்கு ............................

1. எழுத்து 2. மை 3. மூடி

★ *பின்வரும் பிரசினங்களை விளங்கிக்கொண்டு, அதற்கியங்க; 10 ஆம், 11 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.*

| | | |
|---|---|---|
| RSM | MAW | TMS |
| + RSM | - RMS | + MSR |
| 246 | 222 | 953 |

10) W இன் பெறுமதி எவ்வளவு?

1. 6 2. 4 3. 5

11) T இன் பெறுமதி எவ்வளவு?


1. 3 2. 5 3. 6


★ *12 ஆம், 13 ஆம் வினாக்களிலுள்ள சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல் வரிசையின்கீழ்க் கோடிடுக.*

12) 1. சிங்கம், யானை, புலி, பூனை
2. வெண்டி, கத்தரி, தக்காளி, மிளகாய்
3. கொழும்பு, மாத்தளை, இலங்கை, கண்டி

13) 1. கதிரை, கட்டில், தளபாடம், மேசை
2. புறா, கிளி, கோழி, காகம்
3. தென்னை, பனை, கமுகு, கித்துள்

★ *14 , 15 வரையுள்ள வினாக்களில் காட்டப்பட்டுள்ள படங்களில் ஒரு பகுதி நீக்கப்பட்டுள்ளது. இந்த இடைவெளிக்குப் பொருத்தமான பகுதியை தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.*

14) 

15) 

16) கடலில் எப்போதும் காணக்கூடியவற்றை தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

1. தோணி → மீன் → மீனவர்
2. நீர் → மீன் → அலை
3. கப்பல் → புயல் → அலை


17) வைத்தியசாலையில் அதிகமாக இருக்க வேண்டியவர்கள்;

1. தாதிகள் 2. வைத்தியர்கள் 3. நோயாளிகள்


18) நாட்டிலுள்ள மரங்கள் யாவற்றையும் வெட்டி அழிப்பதனால் ஏற்படக்கூடிய மிகப் பிரதான பாதிப்பு எது?

1. பறவைகளுக்கு கூடு கட்ட இடம் இல்லாமல் போகும்
2. வீடுகள் கட்ட முடியாது
3. மழை இல்லாமல் போய் வறட்சி ஏற்படும்

★ *19 ஆம், 20 ஆம் வினாக்களில் முதல் இரண்டு படங்களில் உள்ள இலக்கங்களுக்கிடையேயான தொடர்பினை அவதானித்து, மூன்றாம் உருவப்படத்தில் காணப்படும் இடைவெளியை நிரப்புவதற்குப் பொருத்தமான இலக்கத்தினை தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.*

19) 


1. 40 2. 15 3. 50

20) 


1. 3 2. 27 3. 20

21) பழங்கள், வாழைப்பழம், மரக்கறி என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்கு பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இந்த உருவில் வாழைப்பழத்தைக் காட்டும் எழுத்து யாது?




1. H 2. T 3. B


22) வீதியொன்றில் நீலம், கறுப்பு, சிவப்பு,பச்சை ஆகிய நான்கு நிறக்கொடிகள் இதே ஒழுங்கில் அலங்கரிக்கப்பட்டுள்ளன. 43 ஆவதாக காணப்படும் நிறக்கொடி யாது?

1. கறுப்பு 2. சிவப்பு 3. பச்சை

23) ஒரு சதுர வடிவக் காணியை ஒரு பக்கத்திலிருந்து அவதானிக்கும்போது, 12 தூண்கள் காணப்படுகின்றன எனில், அக்காணியைச் சுற்றிவர நடப்பட்டுள்ள தூண்களின் எண்ணிக்கை யாது?

1. 48 2. 52 3. 44

★ *பின்வரும் அடைப்பினுள் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி 24 ஆம், 25 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்க.*




24)  எதற்குச் சமம்?

1. 900ml 2. 1000ml 3. 800ml

25)  எதற்குச் சமம்?


1. 100ml 2. 400ml 3. 300ml

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காய் நண்டு

இந்து மற்றும் பசுபிக் சமுத்திரங்களிலுள்ள தீவுகளில் காணக்கூடிய மிகப் பெரிய தரைவாழ் நண்டினம்தான் இந்தத் 'தேங்காய் நண்டு'. இந்த நண்டுகளின் பிரதான உணவு தேங்காய் ஆகும். தென்னை மரத்தில் ஏறி, தானாகவே தேங்காயைப் பறித்து உண்பது இந்த நண்டுகளின் விசேட ஆற்றலாகும். இவற்றின் உடல் கடும் நீலம் மற்றும் கபில நிறம் கலந்ததாகக் காணப்படும். இவை தென்னை மரங்களில் ஏறித் தேங்காயைப் பறித்து-உரித்து-உடைத்து அதனுள் இருக்கும் பருப்பைச் சாப்பிடும்.







இந்தத் தேங்காய் நண்டானது, 'தேங்காய்க் கள்வன்' என்றும் அழைக்கப்படுகின்றது. அத்துடன், 'கள்ள நண்டு' என்று இதற்கு மற்றொரு பெயரும் உண்டு. இதற்கு இப்பெயர் வரக் காரணம், சில வேளைகளில் வீடுகளிலுள்ள பளபளக்கக்கூடிய பாத்திரங்களை இவை களவாடிச் செல்வதாகக் கூறப்படுவதனாலேயே ஆகும்.

வளர்ச்சியடைந்த தேங்காய் நண்டுகளால் நீந்த முடியாது. எனவே, கரையோரத்தில் நீர் குறைந்த ஈரலிப்பான பகுதிகள் மற்றும் முருகைக் கல் இடுக்குகளிலேயே இவை தமது வாழிடங்களை அமைத்துக்கொள்கின்றன.







இலங்கைப் பத்திரிகைத் துறையில் நீண்ட காலமாக பணியாற்றி வருகின்ற 70 இற்கும் மேற்பட்ட ஓவியர்களின் கண்காட்சியொன்று அண்மையில் கொழும்பு-07, கலா மன்றத்தில் இடம்பெற்றது. நான்கு நாட்களாக இடம்பெற்ற இக்கண்காட்சியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைத்தார். கண்காட்சியின் இறுதி தினத்தன்று பிரதமர் டி.எம்.ஜயரத்ன கலந்துகொண்டு சிறப்பித்தார். இந்த ஓவியக் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பிரபல ஓவியர் கலாபூஷணம் எஸ்.டி.சாமியின் ஓவியங்களை ஜனாதிபதியும் பிரதமரும் பார்வையிடுவதை படங்களில் காணலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவில்

## சுவை, நறுமணம், நிறம் என்

### ‘பலசரக்கு’ என்

நாம் அன்றாடம் உட்கொள்கி
நறுமணம், நிறம் என்பனவற்
சத்துமிக்க உணவுப் பொருளா
உணவு தயாரிப்பின்போது, பல்
பயன்படுத்துகின்றோம். உப்பு,
மஞ்சள் என அந்தப் பட்டியல் நீ
செல்லும். இவற்றையே ‘பலச
உலகெங்கிலும் வாழும் மக்கள்
போது, தமது கலாசாரப் பண்ப
பலசரக்குப் பொருட்களைப் ப
லாம். அந்தவகையில், உணவு
தப்படுகின்ற பலசரக்குப் பொரு
அறிந்துகொள்வோம்

### வெள்ளைப்பூண்டு *(Allium sativum)*

**Garlic**



வெள்ளைப்பூண்டின் பிறப்பிடம் மத்திய ஆசியாவாகும்.

உணவுக்கு சுவையும் நறுமணத்தையும் போஷாக்கையும் தருவதில் வெள்ளைப்பூண்டு முக்கிய இடம் வகிக்கின்றது. அதேபோன்று, புற்றுநோய்த் தடுப்பு நிவாரணியாகவும் வாதம், மூட்டுவலி போன்ற நோய்களுக்கு மருந்தாகவும் வெள்ளைப்பூண்டு பயன்படுத்தப்படுகின்றது.

சீனா, இந்தியா, தென்கொரியா, சுவீடன், அயர்லாந்து போன்ற நாடுகளில் வெள்ளைப்பூண்டு கூடுதலாகப் பயிரிடப்படுகின்றது.

### கராம்பு *(Syzgium aromaticum)*

**Clove**



கராம்பு, உணவுக்கு சுவையூட்டியாகவும் வாசனைத் திரவியமாகவும் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன், மருத்துவக்குணமும் கொண்டதாகும். கராம்பின் பிறப்பிடமாக இந்தோனேஷியா, மடகஸ்கர், சென்சிபார், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் திகழ்கின்றன. கராம்பு நெட்டில் தனித்துவமான வாசனை நிலவக் காரணம், அதில் அடங்கியுள்ள 'இய்ஜினோல்' என்ற பதார்த்தமாகும். கராம்பு நெட்டில் இருந்து மணம் கமழும் எண்ணெய் மற்றும் மருத்துவப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

### பெருஞ்சீரகம் *(Foeniculum vulgare)*

**Fennel**



பெருஞ்சீரகம், உணவுக்கு சுவையூட்டியாகவும் வாசனைத் திரவியமாகவும் மருத்துவ குணம் மிக்க மூலிகையாகவும் பயன்படுத்தப்படுகின்றது. இயற்கைப் பற்பசை தயாரிப்பிலும் பெருஞ்சீரகம் பயன்படுத்தப்படுகின்றது. தவிர, இதிலிருந்து நறுமணம் கமழும் எண்ணெய்யும் தயாரிக்கப்படுகின்றது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் பெருஞ்சீரகம் பெருமளவில் பயிரிடப்படுகின்றது. பெருஞ்சீரகமானது, பல்வேறு வகையான நோய்களுக்கு மருந்தாகவும் இருந்து வருகின்றது.

### மல்லி *(Coriandrum sativum)*

**Coriander**



'கொத்தமல்லி' என்றழைக்கப்படும் 'மல்லி', உணவுக்கு சுவையையும் வாசனையையும் வழங்குகின்றது.

மல்லித்தாவரத்தின் எல்லாப் பகுதிகளும் உணவு மற்றும் மருத்துவ தேவைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. கிழக்கு ஐரோப்பா, வட ஆபிரிக்கா, தூர கிழக்கு ஆசியா போன்ற பிரதேசங்கள் கொத்தமல்லியின் பிறப்பிடமாகக் கருதப்படுகின்றது. உணவு தயாரிப்பின்போது, மல்லி விதையும் தூளும் இலையும் பயன்படுத்தப்படுகின்றன. தவிர, கொத்தமல்லி விதை அவிக்கப்பட்டு அந்த நீர் சிறந்த நோய் நிவாரணியாகவும் அருந்தப்படுகின்றது. அத்துடன், பக்றிரீயா கிருமி அழிக்கும் தன்மையையும் மல்லி கொண்டிருக்கின்றது.

இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள், தென் ஆசியா, லத்தீன் அமெரிக்கா, சீனா, ஆபிரிக்கா, மெக்சிகோ போன்ற நாடுகளில் மல்லி கூடுதலாகப் பயிரிடப்படுவதோடு, அங்குள்ளவர்களால் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.

மல்லியில் 'டெரபின் லய்னலூல்' மற்றும் 'பய்னின்' ஆகிய ரசாயனப் பதார்த்தங்கள் அடங்கியுள்ளன.

### கறிவேப்பிலை *(Murraya koenigii)*

**Curry Leaves**



இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் உணவு தயாரிப்பின்போது, இலையாகவும் அரைத்து துவையலாகவும் உணவுடன் சேர்க்கப்படுகின்றது. உணவுக்கு சிறந்த சுவையூட்டியாகவும் சத்தளிப்பதாகவும் நிறமூட்டியாகவும் கறிவேப்பிலை பயன்படுத்தப்படுகின்றது. விஷத்தைக் கட்டுப்படுத்தும் ஆயுள்வேத மூலிகையாகவும் கறிவேப்பிலை இருக்கின்றது.

### ஏலம் *(Elettaria cardamomum)*

**Cardamom**



இந்தியா முதல் மலேசியா வரையான பிரதேசங்களில் ஏலம் முக்கிய இடத்தை வகிப்பதோடு, இங்கு அதிகளவில் பயிரிடப்படுகின்றது.

உணவுக்கு சுவையையும் வாசனையையும் ஏலம் வழங்குகின்றது. பாலை சுவையூட்ட ஏலம் பயன்படுத்தப்படுகின்றது. மருத்துவக் குணம் மிக்கது. ஏலம் அதிகமாகப் பயிரிடப்படும் நாடாக நேபாளம் திகழ்கின்றது.

### கொரக்காய் *(Garcinia quaesita pierre)*

**Goraka**



உணவு வகைக்கு புளிப்புத்தன்மைக்காக, கொரக்காய் சேர்க்கப்படுகின்றது. மீன், வாழைப்பூ, ரசம், பலாப்பிஞ்சு போன்ற உணவுகள் தயாரிப்பின்போது, புளிப்புத்தன்மையைப் பெறுவதற்காக, கொரக்காய் சேர்க்கப்படுகின்றது. கொரக்காயைக் காயவைப்பதனால், நீண்ட காலத்திற்கு அதனைப் பேணி வைத்திருக்கலாம். தெற்காசிய நாட்டுச் சமையலில் கொரக்காயிற்கு தனியிடம் உண்டு.

### இஞ்சி *(Zingiber officinale)*

**Ginger**



இஞ்சி, வாசனைத் திரவியமாகவும் மளிகைப் பொருளாகவும் மருத்துவ குணம் கொண்ட ஒரு பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

பல்வேறு வகையான நோய்களுக்கு மருந்தாக இஞ்சிச் சாறு பயன்படுகின்றது. அதேபோன்று, மென்பானத் தயாரிப்பிலும் இஞ்சி முக்கிய இடத்தை வகிக்கின்றது. தவிர; இனிப்புப் பண்டங்கள், தோசி, பிஸ்கட் வகைகள், கேக், பியர் போன்றவற்றின் தயாரிப்புக்காகவும் இஞ்சி பயன்படுத்தப்படுகின்றது.

சீனா, ஜப்பான் மற்றும் தெற்காசிய நாடுகளில் உணவு தயாரிப்பில் இஞ்சி சுவையூட்டியாகவும் மருந்தாகவும் புகழ் பெற்றிருக்கின்றது.

### கறுவா *(Cinnam*

**Cinnamon**



உணவுப் பொருள்
தயாரிப்பின்போது, சுவையூட்டியாகவு
வாசனைத் திரவியமாகவும்
நிறமூட்டியாகவும் கறுவாப்பட்டை
பயன்படுத்தப்படுகின்றது.
கறுவாப்பட்டை ஏற்றுமதியில்
முன்னணி வகிக்கும் நாடுகளில்
ஒன்றாக இலங்கை விளங்குகின்றது.
சுமார் 4000 வருடங்களுக்கு
முன்பிருந்தே கறுவாப்பட்டை ஒரு
மருத்துவப் பொருளாகப்
பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அத்து
ஆவியாகும் தன்மையுடைய கலவையை
தயாரிக்கப்படுகின்றது. 'சினமெண்ட் ஹய்
அசிடேட்' ஆகியன கறுவாவில் அடங்கிய
கூட்டுச்சேர்வையாகும்.

### மிளகு *(Piper*

**Black pepper**



கறுப்பு மிளகு, வெ
அடிப்படையில் மிள
வகைப்படுத்தலாம்.
தோல் சிவப்பு நிறமா
கொடியில் இருந்து ப
நிற
உல
பய
மிளக
சுவையூ
மிக்கதாகவு
'பய்பரின்' என்ற ரசாயனக் கூட்டுச்சேர்
உணவு வகையுடன் சேர்க்கப்படும்போது,
கிடைக்கப்பெறுகின்றது.
மிளகின் பிறப்பிடம் இந்தியவாகும். உ
நாடுகளில் முன்னணி வகிப்பது வியட்நா
தேவைப்படும் மிளகின் அளவில் 34 சதவீ
செய்கின்றது. உணவுக்கு சுவையூட்டியாக
தேவைக்காகவும் பயன்படும் மிளகு, எமது
பயிரிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ன்றால் என்ன?

...ள்கின்ற உணவுகளில் சுவை,
...பற்றை அதிகரிப்பதற்காகவும்
...ளாக அதனை மாற்றவும்
... பல்வேறு பொருட்களைப்
...ப்பு, புளி, சீரகம், மிளகாய்,
...ல் நீண்டுகொண்டே
...லசரக்கு' என்கின்றோம்.
...க்கள் உணவு தயாரிப்பின்
...ண்பாடுகளுக்கேற்ப பல்வேறு
...ப் பயன்படுத்துவதைக் காண
...னவு தயாரிப்பில் பயன்படுத்
...பாருட்கள் சிலவற்றைப் பற்றி

### சாதிக்காய் (*Myristica fragrans*)



**Nutmeg**

உணவுக்கு சுவையூட்டியாகவும் வாசனைத் திரவியமாகவும் சாதிக்காய் பயன்படுத்தப்படுகின்றது. சாதிக்காயிலிருந்து மூன்று விதமான பலசரக்குப் பொருட்கள் பெறப்படுகின்றன. அவையாவன: சாதிக்காய் விதையும் விதையிலுள்ள பருப்பும் விதையைச் சூழ படர்ந்துள்ள வளைபோன்ற பகுதியும் ஆகும்.

சாதிக்காயின் பிறப்பிடம் இந்தோனேஷியாவாகும். அத்துடன், கிரனேடா, இலங்கை, ரினிடாட், சீனா, இந்தியா ஆகிய நாடுகளிலும் சாதிக்காய் கூடுதலாக விளைகின்றது. சாதிக்காய் மருந்துப் பொருளாகவும் பயன்படுகின்றது.

வயிற்று வலி, குடல் புண் மற்றும் பல்வேறு நோய்களுக்கு சாதிக்காய் சிறந்த மருந்தாகும். சாதிக்காய் எண்ணெய்யில் 'மிரிஸ்டிசின்', 'லய்னலூல்', 'செபரோல்' ஆகிய ரசாயனக் கூட்டுச்சேர்வைகள் அடங்கியுள்ளன.

### புதினா (*Mentha arvensis*)



**Field Mint**

உணவுக்கு சுவையை ஏற்படுத்துவதற்காகவும் சோறு, மாமிச வகை மற்றும் இதர உணவுகளை சமைக்கும்போது, சிறந்த நறுமணத்தைப் பெறுவதற்காகவும் புதினாக் கீரை பயன்படுத்தப்படும். இதனை அரைத்து துவையல் செய்து சம்பலாகவும் உண்பது வழக்கமாகும்.

குளிர் காலநிலை நிலவும் பிரதேசங்களில் புதினாக்கீரை செழித்து வளரும். ஐரோப்பிய நாடுகள், இமயமலைப்பிரதேசம், கிழக்கு சைபீரியா, வட அமெரிக்கா ஆகிய நாடுகளில் கூடுதலாக பயிரிடப்படுகின்றது.

### மிளகாய் (*Capsicum sp.*)



**Chilli Pepper**

'கெப்சிகம்' குடும்பத்தைச் சேர்ந்த மிளகாயின் பிறப்பிடம் அமெரிக்காவாகும். அமெரிக்காவில் இருந்து உலகம் முழுவதற்கும் பரவிய மிளகாய், இலங்கையில் வெளிநாட்டவர்களின் ஆக்கிரமிப்புடன் அறிமுகமாகியது.

கி.மு.7500 ஆம் ஆண்டளவில் இருந்து உணவு தயாரிப்பில் பச்சையாகவும் உலர்த்தப்பட்டும் தூளாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மிளகாயில் அடங்கியுள்ள 'கெப்சைசின்' என்ற ரசாயன கூட்டுச் சேர்வை காரணமாக மிளகாய் உறைப்புத் தன்மையைப் பெற்றிருக்கின்றது.

# ...ன்பனவற்றை அதிகரிக்கும்

# பலசரக்கு

### ...namomum verum)



...வு

...த்துடன், கறுவாவில் அடங்கியுள்ள
...யைப் பயன்படுத்தி எண்ணெய் வகை
...ஹய்ட்', 'இயுஜினோல் சினமய்ல்
...ங்கியுள்ள முக்கிய ரசாயனக்

### ...iper nigrum)

...வெள்ளை மிளகு, பச்சை மிளகு என்ற
...மிளகினை மூன்று வகையாக
...ாம்.
...மாகுமளவிற்கு பழுத்த பின்னர்
...பறிக்கப்பட்டு- உலர விட்டு கறுப்பு
...நிற மிளகு பெறப்படுகின்றது.
...உலகில் உணவுக்காக அதிகளவில்
...பயன்படுத்தப்படுவது இந்த கறுப்பு
...ளகாகும். உணவுக்கு சிறந்த
...வயூட்டியாகவும் மருத்துவக் குணம்
...கவும் காணப்படுகின்றது.
...சர்வை மிளகில் அடங்கியிருப்பதால்,
...து, பிரத்தியேக சுவை

...உலகில் மிளகு உற்பத்தி செய்யும்
...நாம் ஆகும். உலகிற்கு
...தவீதத்தை வியட்நாமே உற்பத்தி
...பாக மட்டுமல்லாது மருத்துவ
...மது நாட்டிலும் பரவலாகப்

### வெந்தயம் (*Anethum graveolens*)



**Dill Seed**

உணவுக்கு சிறந்த சுவையூட்டியாகப் பயன்படுத்தப்படுகின்றது. வெந்தயத்தின் பிறப்பிடம் இந்தியாவின் காஷ்மீர், பன்ஜாப் ஆகிய பிரதேசங்களாகும். இந்தியா, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பெருமளவில் வெந்தய பயிரிடலில் ஈடுபடுகின்றன. உலகில் வெந்தயம் பயிரிடுவதில் முன்னணி நாடாக இந்தியா காணப்படுகின்றது.

வெந்தயத் தாவரத்தின் இலையும் பயனளிக்கின்றது. வெந்தயத்திலிருந்து எண்ணெய்யும் தயாரிக்கப்படுகின்றது. உணவுக்கு சுவையைத் தருவது போன்று வாதம், குடல் அலர்ச்சி உட்பட, பல்வேறு விதமான நோய்களுக்கு சிறந்த மருந்தாகவும் வெந்தயம் பயன்படுகின்றது.

### புளியங்காய் (*Tamarindus indica*)



**Tamarind**

உணவுக்கு புளிப்புச் சுவையைப் பெற்றுக்கொள்வதற்காக புளியம்பழம் பயன்படுத்தப்படுகின்றது. உலர் வலயத்தில் கூடுதலாக புளியம் மரங்கள் அடர்த்தியாக வளர்க்கப்படுகின்றன. சமையலில் புளியம்பழமே பயன்படுத்தப்படுகின்றது. புளியங்காயில் புளிப்புச்சுவை அதிகளவில் இருப்பதால், அது சமையலின்போது பயன்படுத்தப்படுவதில்லை. தவிர; இனிப்புப் பண்டங்கள், சிற்றுண்டிகள், டொபி வகைகள், ஜேம், அச்சாறு செய்வதற்கும் புளியம்பழம் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன், சிறந்த மருத்துவக் குணம் கொண்டதாகவும் இது காணப்படுகின்றது.

இலங்கை, இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் புளியம்பழம் பல்வேறு தேவைகளுக்காக அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.

### மஞ்சள் (*Curcuma longa*)



**Turmeric**

உணவுக்கு சுவையூட்டவும் நிறமூட்டவும் வாசனைத் திரவியமாகவும் மஞ்சள் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன், பண்டைய காலத்திலிருந்து பிரதானமானதொரு மூலிகையாகவும் கிருமி நாசினியாகவும் மஞ்சள் பயன்படுத்தப்படுகின்றது. மஞ்சளில் விரைவில் ஆவியாகும் தன்மைகொண்ட 'கர்கியுமின் பொலிஃபினோல்' என்ற ரசாயனப் பதார்த்தம் அடங்கியிருக்கின்றது. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மஞ்சள் உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றன.

### சீரகம் (*Cuminum cyminum*)



**Cumin**

சீரகப் பயன்பாட்டின் வரலாறு கி.மு. இரண்டாம் நூற்றாண்டு வரை பின்னோக்கிச் செல்கின்றது. உலகின் மிளகுப் பாவனைக்கு அடுத்தபடியாக சமயலில் பயன்படுத்தப்படும் பலசரக்குப் பொருளாக சீரகம் (சிறிய சீரகம்) காணப்படுகின்றது. உணவில் சேர்க்கப்படுவதால் எமக்கு ஏற்படும் பலவிதமான நோய்களுக்கு தடுப்பு மருந்தாகவும் இது அமைகின்றது.

பாகிஸ்தான், இந்தியா போன்ற ஆசிய நாடுகள் கூடுதலாக சீரகத்தைப் பயிரிடுகின்றன. சீரகம் பலவிதமான மருந்துவகை தயாரிப்புக்கும் எண்ணெய் வகை தயாரிப்புக்கும் பயன்படுத்தப்படுவதோடு, இனிப்பு வகை உற்பத்தியிலும் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

### கடுகு (*Brasica juncea*)



**Mustard**

கடுகு உணவுக்கு சுவையூட்டியாகவும் நறுமணம் தரக்கூடியதாகவும் அமைகின்றது. சிறிதாக இருந்தாலும் அதிக காரத்தன்மை வாய்ந்ததாகும்.

கடுகு பயிரிடலில் ஈடுபடும் நாடுகளில் இந்தியா முதலிடம் வகிக்கின்றது. இலங்கையில் சேனைப் பயிர்ச்செய்கையில் கடுகு பயிரிடப்படுகின்றது.

கடுகு மருத்துவ தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

**அமீர் ஹுசைன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத் திட்டத்தை அறிந்துகொள்ள மூளை ஸ்கேன்

மூளையை ஸ்கேன் செய்து எதிர்காலத் திட்டத்தை தீர்மானிக்க முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். எதிர்காலம் குறித்து திட்டமிட முடியாமல் குழப்பமடையும் பலருக்கு இனி அந்தக் கவலை தேவையில்லை. மூளையை ஸ்கேனிங் செய்வதன் மூலம் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் லட்சியங்களைக் கணிக்க முடியும். இதற்கான ஆய்வினை கலிஃபோர்னியா பல்கலைக்கழக நரம்பியல் விஞ்ஞானிகள் மேற்கொண்டனர். இதற்காக அவர்கள் மனிதனின் மூளையில் புதிதாக 'மேப்பிங்' எனும் முறையைப் பயன்படுத்தினர். அதன்மூலம் அவர்களின் மனதில் எதிர்காலத்தின் லட்சியம் என்ன? எந்தவிதமான பாடப்பிரிவை தெரிவு செய்வதன்மூலம் நிபுணராக முடியும் எனும் வியூகங்களைக் கணித்துள்ளனர். இதற்கு 'மனோதத்துவ கணக்கீடு' என்றும் பெயரிட்டுள்ளனர். இதற்காக 6,000 பேரின் மூளைகள் ஸ்கேன் செய்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.



எம்.ஐ.எப்.ஹஸ்னா,
அல்-ஹிக்மா மு.ம.வித்., கும்புக்கந்துரை.

# நட்பு



ஓர் அழகிய காட்டில் பஞ்சவர்ணக்கிளியும் புறாவும் நண்பர்களாக இருந்தன. அவை ஓர் ஆலமரத்தில் நகமும் சதையும்போல் வசித்து வந்தன. இதைக்கண்ட காகம் ஒன்று மிகவும் பொறாமைப்பட்டு அந்த இருவரின் நட்பையும் பிரிக்க எண்ணியது.

அன்று ஒருநாள் காகம் பஞ்சவர்ணக் கிளியிடம் "புறா ஒரு துரோகி. நீ அதனுடன் சேராதே. ஒருநாள் என்னிடம் உன்னைக் கொன்று சாப்பிடுவதாகக் கூறியது" என்று பொய் வார்த்தைகளைக் கொட்டியது. அதனைக் கேட்ட புறா "இல்லை நீ எங்களது நட்பைப் பிரிக்க இவ்வாறு கூறுகிறாய்" என்று கூறியது. அதேபோன்று, காகம் பஞ்சவர்ணக்கிளியிடமும் கூறியது. பஞ்சவர்ணக்கிளி காகத்தின் சொல்லை நம்பி அன்றிலிருந்து புறாவிடம் பேசவோ, பழகவோ இல்லை.

பஞ்சவர்ணக்கிளி காகத்துடன் நட்புறவாகி காகம் வசிக்கும் வேப்ப மரத்தில் வசித்து வந்தது. ஒருநாள் பஞ்சவர்ணக்கிளி ஆல மரத்துக்கு அருகில் உள்ள மாமரத்தில் மாம்பழங்களை உண்டபடி இருந்தது.

அந்த நேரம் மைனா ஒன்று வந்து அங்கிருந்த புறாவிடம், "ஏன் இவ்வளவு சோர்வாக உள்ளாய். உனது நண்பனாகிய பஞ்சவர்ணக்கிளியிடம் நீ கதைப்பதில்லையா? பாவம் அது!" என்று கூறியது. அப்போது புறா, "ஒரு காகம் ஒன்று எங்களது நட்பைக் கண்டு பொறாமைப்பட்டு பஞ்சவர்ணக்கிளியிடம் பொய்யைக் கூறி எம்மைப் பிரித்துவிட்டது" என்று அழுதது. தனது மரத்திலிருந்து இதனைக் கேட்டுக் கொண்டிருந்த பஞ்சவர்ணக்கிளி உடனே புறாவிடம் சென்று "நண்பா! என்னை மன்னித்துவிடு. நான் உன்னைத் தவறாக நினைத்துவிட்டேன்" என்று கண்ணீர் மல்க மன்னிப்புக் கேட்டது. அன்றிலிருந்து புறாவும் பஞ்சவர்ணக்கிளியும்சந்தோஷமாக வாழ்ந்து வந்தன.

சி.ஹரிப்பிரியா,
வின்சர் அவனியூ, தெஹிவளை.

## இலங்கையின் வேறு பெயர்களும் அப்பெயர்களை அழைத்தவர்களும்



| வேறு பெயர் | அழைத்தவர்கள் |
|---|---|
| 1. தம்பபன்னி | ஆரியர் |
| 2. செரண்டிப் | அரேபியர் |
| 3. தப்ரபேன் | கிரேக்கர் |
| 4. சிலதுவீபம் | இந்தியர் |
| 5. சீலம் | சீனர் |
| 6. செயிலான் | போர்த்துக்கேயர் |
| 7. சிலான் | ஒல்லாந்தர் |
| 8. சிலோன் | ஆங்கிலேயர் |

# தேக்கு மரம்



தேக்கு மரத்தைக் கறையான் அரிக்காதமைக்கான காரணம் அம்மரத்தில் சுரக்கும் ஒரு வகைக் 'குங்கிலியம்' போன்ற எண்ணெய்ப் பசையாகும். தேக்கு மரத்தை அறுக்கும் போது, ஒருவகை மணம் வரும். அந்த மணத்திற்கும் இப்பசைதான் காரணம். அதனாலேயே கறையான்கள் அம்மரத்தை அணுகுவதில்லை. மழைக்காலங்களில் ஏனைய மரங்களில் காளான்கள் முளைப்பது போன்று, தேக்கு மரத்தில் காளான்கள் முளைப்பதில்லை.



அத்துடன், இரும்பின்மீது தேக்கு மரம் படுமானால், அந்த இரும்பு துருப்பிடிக்காது. இதற்கெல்லாம் காரணம் அந்த எண்ணெய்ப் பசைதான். இதனால்தான் தேக்கு மரத்தை உயர்ந்த மரம் என்று குறிப்பிடுகின்றனர்.

நி.ப. அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்., மருதமுனை

## இலங்கை பற்றிய சில தகவல்கள்



- இலங்கையின் மிகப்பெரிய இயற்கை வனம் எது?
  சிங்கராஜவனம்
- இலங்கையில் உள்ள மிருகக்காட்சிசாலை எது?
  தெஹிவளை
- இலங்கையின் இயற்கைத் துறைமுகம் எங்குள்ளது?
  திருகோணமலையில்
- இலங்கையில் இரத்தினக்கற்களுக்கென பிரசித்தி பெற்ற இடம் எது?
  இரத்தினபுரி



- இலங்கையின் புராதன வரலாற்றைக் கூறும் நூல்கள் எவை?
  மகாவம்சம், தீபவம்சம், சூளவம்சம்
- இலங்கையின் வெந்நீர் ஊற்றுக்கள் எங்குள்ளன?
  திருகோணமலை (கன்னியாவில்)
- இலங்கையின் மிகப் பிரபலமான தாவரவியல் பூங்கா எது?
  பேராதனைப் பூங்கா
- இலங்கையின் தேசிய விளையாட்டு, தேசிய மலர் என்பன எவை?
  கரப்பந்தாட்டம், நீலோற்பலம்
- இலங்கையின் தேசிய மரம் எது?
  நாகமரம்

ஏ.என்.சப்னி, பசறிச்சேனை, பொத்துவில்-19.

## இலங்கையின் பண்டைய இடப்பெயர்கள்

- கோகன்ன என அழைக்கப்பட்ட இடம் எது?
  திருகோணமலை
- களனியின் பண்டைய பெயர் எது?
  கல்யாணி
- ஊர்காவற்றுறை, கொட்டியாரம் ஆகியவற்றின் பண்டைய பெயர்கள் என்ன?
  ஊராத்தோட்ட, கொத்தசார
- நாகதீப, சிங்கைநகர் என அழைக்கப்பட்ட இடங்கள் எவை?
  யாழ்ப்பாணம், நல்லூர்
- கங்கசிரிபுர என அழைக்கப்படும் இடம்?
  கம்பளை

எஸ்.சகிலா,
இல்டன்ஹோல், லிந்துல.



## கட்டுரை வகைகள்

1. இலக்கியக் கட்டுரைகள்
   - வர்ணனைக்கட்டுரை
   - கற்பனைக் கட்டுரை
   - சிந்தனைக் கட்டுரை
   - நகைச்சுவைக் கட்டுரை
2. அறிவியல் கட்டுரைகள்
   - விளக்கக் கட்டுரை
   - விமர்சனக் கட்டுரை
   - விவரணக் கட்டுரை
   - ஆய்வுக் கட்டுரை

எப்.சுமையா உ[illegible],
புனித/அந்தோனியார் ம.கல்.,
கண்டி.

## பெற்றோர்



அம்மாவை அன்னை மாதாவென்றும்
அப்பாவை தந்தை பிதாவென்றும்
அழைத்து மகிழும் சிறுவர் நாம்!

தந்தை சொல்மிக்க மந்திரமில்லை
தாயிற் சிறந்ததொரு
கோயிலுமில்லை-என்ற
தாய்த் தமிழில் புகழும் சிறுவர் நாம்!


சின்னஞ்சிறிய பிள்ளைகள் நாம்
சிருடன் பெற்றோரை என்றும் மதித்து
அவர் சொல்லும் சொல்லை
அமுதமொழியாகக் கொண்டு
நல்ல சிறார்களாய் வாழ்வோம்
வளமுடன் நாம்!


வி.வாசனா,
கண்டுக்குளி மகளிர் கல்லூரி, கண்டுக்குளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3

சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய நிறங்களில் எத்தனை உருக்கள் உள்ளன? என்பதை கணக்கிட்டு இணைக்க











தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2012.01.25ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 348
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## இடைவெளிகளை நிரப்புக — 1




## சரியான உருவை அமைக்க — 2



## சரியான சொல்லில் கோடிடுக — 4

1. நச்சத்திரம்/ நட்சத்திரம்/ நட்ச்சத்திரம்
2. பல்ளத்தாக்கு / பள்ளதாக்கு/ பள்ளத்தாக்கு
3. வளக்கறிஞர்/ வழக்கறிஞ்ஞர்/ வழக்கறிஞர்
4. புண்ணியம்/ புண்னியம்/ புன்னியம்
5. வேண்டுகோல்/ வேன்டுகோள்/ வேண்டுகோள்

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 345 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
வி.கஜீபா, அம்பாள் குளம், கிளிநொச்சி.

**போட்டி: 02**
இஷாக் அஹமட், ஆண்டியாகடவத்த, கம்பளை.

**போட்டி: 03**
வ.திவாகர், விளையாட்டரங்கு வீதி, கோப்பாய்.

**போட்டி: 04**
எஃப்.ஸய்பா, ஹாஜா வீதி, சாய்ந்தமருது.

**போட்டி: 05**
எம்.ஜிஸ்யான்,
பாடசாலை குறுக்கு வீதி, மாவடிச்சேனை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ★ எம்.ஹுஸைன், உப்புக்குளம்.
- ★ ஜெ.சந்தோஷகா, சித்தங்கேணி.
- ★ கௌ.கௌதமி, கைதடி.
- ★ எம்.சறபி, நிந்தவூர்.
- ★ எம்.அஃப்சல், சவறானை.
- ★ எம்.சுஜித்குமார், செல்வாநகர்.
- ★ ஏ.பாத்திமா, மாதம்பை.
- ★ எம்.ஹிஸாம், ஒட்டமாவடி.
- ★ எம்.நளீம், வில்பொல.
- ★ சூ.விமலேசன், பருத்தித்துறை.

## அறிவுக்கு விருந்து - 345 விடைகள்

**போட்டி: 01**

1. மணி
2. வெள்ளி விழா
3. டிசம்பர் 1 ஆம் திகதி
4. நீல அல்லி
5. நெய்தல்

**போட்டி: 02**

1. ஜப்பான்
2. கியூபா
3. ஆப்கானிஸ்தான்
4. பிரேசில்
5. சிங்கப்பூர்



**போட்டி: 03**



**போட்டி: 05**




## பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான மரபுத்தொடரை தெரிவுசெய்து எழுதுக — 5

*(நுனிப்புல் மேய்தல்/ உச்சி குளிர்தல்/ சந்தியில் நிற்றல்/ தட்டிக் கொடுத்தல்)*

1. மிக்க மகிழ்தல் - ..............................
2. உற்சாகப்படுத்தல் - ..............................
3. மேலோட்டமாகப் படித்தல் - ..............................
4. ஆதரவின்றி இருத்தல் - ..............................

## விஜய் வாசகர் மடல்





*புதுவருடத்தின் முதல் இதழே என்னை வியக்கவைத்தது. 'புதுவருடத்தில் இன்னுமொரு படி முன்னேறுவோம்' என்ற ஆசிரியர் கடிதம் என்னை உற்சாகப்படுத்தியது. 'தேயிலையின் வளம்' அந்த உற்சாகத்தை மேலும் இரட்டிப்பாக்கியது. 'கண்ணிவெடி அகற்றும் எலிகள்' பற்றிய ஆக்கம் ஆச்சரியப்படவைத்தது. அத்துடன், 'செம்பு', 'சாதனையாளர்: சுபாஷ் சந்திரபோஸ்' உட்பட, பல்வேறு ஆக்கங்கள் ஒன்றிணைந்த புதுவருட இதழுக்கும் விஜய்க்கும் எனது வாழ்த்துக்கள்.*

-எம்.சுகந்தன்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

நீ சுமந்து வந்த தகவல்களில் என்னைக் கவர்ந்தவையாக, 'செவ்வாயில் உயிர் வாழலாம்....' என்ற விண்வெளித் தகவல், 'விளையாட்டுச் செய்திகள்', 'தெரிந்துகொள்வோம்', 'எலிகளின் சாதனை' போன்றவை இருந்தன.

-ஏ.எம்.பஸ்னா,
நியூ டவுன், நாச்சியாதீவு.

உன்னில் பிரசுரமாகியிருந்த 'தேயிலை வளம்', 'வேகமான எலிகள்! விவேகமான பணிகள்', 'படைப்பில் செம்பு காட்டும் வியப்பு' என்பன முக்கிய பல விடயங்களைத் தாங்கி வந்திருந்தன. 'ஒல்லாந்தர்', 'இராமாயணம்', 'மாணவர் ஆக்கம்', 'விண்வெளித் தகவல்கள்', 'கைவண்ணங்கள்' மற்றும் 'சிறுகதைகள்' போன்ற பகுதிகள் எனக்கு மிகவும் பிடித்தமானவையாகும்.

- பா.ரஹீமா,
சமட் மாவத்தை, பேருவளை.

'இராமாயணம்' பகுதி என்னை மிகவும் கவர்ந்தது. மேலும், 'ஆக்கங்கள்', 'அறிவுத் தகவல்கள்' என்பன வற்றினூடாக, எமது அறிவை வளர்க்கக்கூடியதாக உள்ளது. 'வாரம் ஒரு நாடு' போன்ற ஆக்கத்தின்மூலம் உலக நாடுகள் பற்றியும் அங்குள்ள வளங்கள், புகழ்பெற்ற இடங்கள் பற்றியும் அறியக்கூடியதாக உள்ளது.

- அஹ்ஸன் அஹமட்,
செய்லான் வீதி, கல்முனை-03.

வாரந்தோறும் எம் பிஞ்சுக் கைகளை முத்தமிடும் விஜய்யே! புதுவருட இதழ் சிறப்புற்று விளங்கியது. 'இலங்கையின் தேயிலை வளம்' பற்றி அறியத்தந்தமைக்கு நன்றி. இப்பூவுலக நட்சத்திரமாய் சிறகடிக்க வாழ்த்துகிறேன்.

- ஹுதைபிப் அஹ்மத்,
ஜாவா வீதி, கிண்ணியா-07.

விஜய்யே! நீ வாரம் தோறும் சுமந்து வருகின்ற 'இராமாயணம்', 'விண்வெளித் தகவல்கள்' என்பவற்றை விரும்பிப் படிப்பேன். 'இலங்கையின் தேயிலை வளம்', 'செம்பு' என்பனவற்றையும் விரும்பி வாசித்தேன். உன் பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

- இஸ்னா பானு,
மதுரபுர, தெனிபிடிய.



'இலங்கையின் தேயிலை வளம்' எனக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. 'காகிதங்களில் இருந்து மின்சாரம்', 'கணினி தகவல்கள்' உட்பட, ஏனைய ஆக்கங்களும் சுப்பர்.

- சு.மிதுன்னா,
சேவாலங்கா வீதி, தவசிக்குளம்.

இந்த இதழில் (18.01.2012) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 25.01.2012.

அனுப்ப வேண்டிய முகவரி:

வாசகர் மடல்,
'விஜய்'
த.பெ.எண் 2037,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு

கண்டி-தெய்யனவல உமர் மத்ரஸா மாணவர்களுக்கான வருடாந்த பரிசளிப்பு விழா, அண்மையில் மத்ரஸா கட்டடத்தில் இடம்பெற்றது. பிரதம அதிதியாக மத்திய மாகாண சபை உறுப்பினர் ஜே.ஜெய்லாப்தீன் கலந்து சிறப்பித்தார். விழாவின் சில நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

(படமும் தகவலும்: நளீம்)



கேகாலை-துன்தோட டோபட் எஸ்டேட்டைச் சேர்ந்த சசிகுமார்-நிர்மலா தம்பதியரின் செல்வப் புதல்வி எஸ்.ஷாந்தனி, 11.01.2012 அன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் உட்பட, உறவினர்கள் அனைவரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

# அநுராதபுரக் கால சந்திரவட்டக்கல்

அநுராதபுரக் கால சந்திரவட்டக்கல் இந்தியாவின் குப்தர் கால மரபில் உருவாக்கப்பட்டதாகும். இந்திய வழிபாட்டுத்தலங்கள் பலவற்றில் இந்த சந்திர வட்டக்கல் அமைப்பைக் காணலாம்.

ஆரம்பகாலத்தில் உருவாக்கப்பட்ட




சந்திரவட்டக்கல்லில் எந்தவிதமான அலங்காரமும் இடம்பெறவில்லை. பின்னர், சிறியளவிலான செதுக்கல்கள் இடம்பெற்றன. அதன்படி, பலாபெதி அலங்காரமும் தாமரை மலர் அலங்காரமும் இடம்பெற்றன. காலப்போக்கில் மிருகங்கள், பறவைகள் போன்ற பல்வேறு அம்சங்களும் இடம்பெற்றன.

இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள சந்திரவட்டக்கற்களில் மிகவும் சிறந்த சந்திரவட்டக்கல் அநுராதபுரத்தின் மகாசேன மாளிகைக்கு அருகிலுள்ள



'பிசோ மாளிகா' சந்திரவட்டக்கல்லாகும் என தொல்பொருளியலாளரான செனரத் பரணவிதானவினால் இனங்காணப்பட்டுள்ளது. அநுராதபுர-பொலன்னறுவைக் கால சந்திரவட்டக்கற்களை நோக்கினால், அதில் பல பிரிவுகள் இருப்பதை அவதானிக்கலாம். இந்த ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு வகையான அலங்காரங்கள் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். இந்த ஒவ்வொரு அலங்கார வரிசையிலும் காணப்படும் அம்சங்கள் பௌத்த சமயப்படி, வாழ்க்கையில் நிகழும் முக்கிய அம்சங்களை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றன. அந்த வகையில்;

- நாகங்களின் வரிசை (நாகதல்ல): ஆசை,குரோதம்
- மிருகங்களின் ஊர்வலம்: சிங்கம்-நோய், குதிரை-மரணம், யானை - மனம்
- கொடிகள் - பேராசை
- தாமரை - முக்தியடைதல்
- அன்னங்கள் - துறவு என அவை அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

(தொடரும்)



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



நவீட் ஷகி,
ஒக்ஸ்போட் ச.பாட., பதுளை.



சிப்னா றஹீம்,
நூரானியா மு.ம.வித்.,
மாவனல்லை.





என்.நபீஸ்,
றோயல் கல்லூரி, கொழும்பு-07.












கே.சுதர்சன்,
வவுனியா த.ம.ம.வித்., வவுனியா.





எம்.ருஷ்தி,
நாங்கல்ல மு.ம.வித்., நாங்கல்ல.



அ.சோபிகன்,
சாவகச்சேரி இ.கல்., சாவகச்சேரி.



சாமிலா இம்ராஸ்,
அலவியா மு.ம.வித்., பாணந்துறை.

## தம்பி, தங்கைகளே!

## 'கைவண்ணங்கள்' குறித்து உங்கள் கவனத்திற்கு...!



உங்கள் கைவண்ணங்களை 'A4' தாளில் மட்டும் வரைந்து அனுப்புங்கள். அதன் பின்பக்கத்தில் உங்கள் பெயர், கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர் என்பனவற்றை தெளிவாக எழுதி அனுப்புங்கள்.

உங்கள் கற்பனைக்கேற்றவாறு, பல்வேறு கருப்பொருள்களின்கீழ் அலங்காரங்கள், காட்சிகள் என ஓவியங்களை வரைந்து அனுப்பி, கைவண்ணங்கள் பகுதியில் இடம்பிடித்துக்கொள்ளுங்கள். நேர்த்தியாகவும் அழகாகவும் வரையப்படும் ஓவியங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவ ஞானம்

திருவல்லிக்கேணி என்ற அழகான சிற்றூரில் அருளானந்தம் என்பவர் வாழ்ந்து வந்தார். வீடு, வாசல், தோட்டம் என அனைத்து வசதிகளுடன் அவர் வாழ்ந்து வந்தார். ஆனால், யாருக்கும் எந்த உதவியும் செய்யமாட்டார். எவர் எந்தப் பொருள் உதவி கேட்டாலும், அதைச் செய்ய மனம் இல்லாதவர். சுருக்கமாகச் சொன்னால், எட்டி மரத்தைப் போல் வாழ்ந்து வந்தார்.

அவரது சித்தப்பா மகன் அன்பரசன், அதே ஊரில் வாழ்ந்து வந்தார். இவர், வறுமையோடு தினமும் போராடினார். இருந்தாலும், தன் ஒரே மகன் மாறனை உயர்படிப்புப் படிக்க வைத்து, நல்ல பணியில் அமர்த்த வேண்டும் என்பதை லட்சியமாகக் கொண்டிருந்தார்.

ஒருநாள் அன்பரசன், தன் அண்ணன் அருளானந்தத்தைப் பார்க்க வந்தார். ''அண்ணா, மாறன் உயர்தரம் வரை படிப்பை முடித்துவிட்டான். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிவிட்டான். அவனது பொறியியல் கல்விக்கான செலவு இருபதாயிரம் ரூபாயை கடனாகக் கொடுங்கள். நான் மூன்று மாதங்களில் வட்டியுடன் சேர்த்து திருப்பித் தந்து விடுகிறேன்'' என்றார்.

உடனே, அருளானந்தம், ''என்ன இருபதாயிரமா? என்னிடம் அவ்வளவு பணம் எல்லாம் இல்லை. இந்த ஆண்டு பயிர் விளைச்சலும் சரியாக இல்லை. அதனால், எனக்கும் பணத்தட்டுப்பாடாகத்தான் உள்ளது. மாறனை ஏதேனும்



வேலைக்கு அனுப்பு'' என்று அறிவுரை சொன்னார்.

''எல்லோரிடமும் பொய் சொல்வது போல், அண்ணன் நம்மிடமும் சொல்கிறாரே..'' என்ற வேதனையுடன் அங்கிருந்து நகர்ந்தார் அன்பரசன்.

இரண்டு நாட்கள் கழிந்தன. அன்பரசன் காலைப் பத்திரிகையை பிரித்துப் படித்துக் கொண்டிருந்தார். அதில் ஒரு செய்தியைக் கண்டதும் அதிர்ச்சி அடைந்தார்.

அதில் முகமூடிக் கொள்ளையர்கள் மூன்று பேர் அருளானந்தத்தின் வீட்டில் புகுந்து 40 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர். மேலும், அருளானந்தத்தையும் அவர் மனைவியையும் நன்றாக அடித்து உதைத்துக் கொடுமைப்படுத்திச் சென்றுள்ளனர் என்று போடப்பட்டிருந்தது.

இதைப் படித்ததும், உடனே தன் அண்ணனைப் பார்க்கப் புறப்பட்டார், அன்பரசன். வழியில் தன் நண்பரும் தமிழ் ஆசிரியருமான முத்துசாமியைச் சந்தித்தார். அவரிடம் அண்ணனுக்கு நேர்ந்த பரிதாப நிலையைப்பற்றி விவரமாகச் சொன்னார்.

அப்போது, முத்துசாமி, ''இதைத்தான் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே 'நல்வழி' என்ற நூலில் ஔவையார்,

'பெற்றார் பிறந்தார், பெருநாட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் என வேண்டா- மற்றோர்
இரணம் கொடுத்தால், இடுவர்! இடாரே
சரணம் கொடுத்தாலும் தாம்!' என்று பாடியுள்ளார்.

''அதாவது கஞ்சன் என்பவன், தன்னைப் பெற்றவர்கள், உடன் பிறந்தவர்கள், உற்றார் உறவினர்கள் என யார் கேட்டாலும் உதவ மாட்டான். ஆனால், காயம் உண்டாகும் அளவிற்கு உதைத்து வதைப்பவனுக்கு வாரிக் கொடுத்து விடுவான்'' என்பதுதான் இந்தப் பாடலின் பொருள்.

''கஞ்சத்தனம் உள்ளவர்கள்பற்றி அப்போதே ஔவையார் தெரிந்து வைத்துள்ளாரே'' என்று அன்பரசன், கூறினார்.

''வாழும்போதே நாம் நான்கு பேருக்காவது உதவ வேண்டும் என்ற ஞானம், பலருக்கும் அனுபவப்பட்ட பிறகுதானே கிடைக்கிறது'' என்றார், தமிழ் ஆசிரியர். அதிலுள்ள உண்மைகளை உணர்ந்துகொண்டார் அன்பரசன்.

# காகம் செய்து உதவி



ஒவ்வொரு நாளும் பகலுணவு நேரம், தவறாமல் மணிவண்ணனின் வீட்டை நோக்கி வந்துவிடும் அந்தக் காகம். மணிவண்ணன் தனது வீட்டிலிருந்து ஒரு பிடி சோற்றினை எடுத்து, தவறாமல் காகத்திற்கு வைத்துவிடுவார். காகமும் ஏனைய காகங்களை எல்லாம் அழைத்து அவற்றுடன் சேர்ந்து அந்த சோற்றினை உண்டுவிட்டுச் செல்லும்.

மணிவண்ணனின் பக் கத்து வீட்டில், ராமன் என்பவன் குடியிருந்தான். அவன் மிகவும் கருமித்தனமானவன். யாருக்கும் எந்த உதவியும் செய்யமாட்டான். தான் சாப்பிடுகின்ற உணவுப்பொருள் தரையில் கொட்டிவிட்டால், எறும்புகள் எடுத்துச் சென்றுவிடுமே, என்று நினைத்து சிறிதுகூட தரையில் கொட்டாத வகையில் சாப்பிடுவான்.

ஒருநாள் மணிவண்ணன் வழக்கமாக காகத்திற்குச் சோறு வைப்பதை ராமன் பார்த்தான். ''மணிவண்ணா! உனக்கு வேறு வேலையில்லையா? நீ எதற்காக காகத்திற்குச் சோறு வைக்கிறாய்? அதனால், உனக்கு என்ன லாபம்?'' என்று கேட்டான்.

கஞ்சத்தனம் படைத்த ராமனிடம் பேசி எந்தப் பிரயோசனமும் இல்லையென்பதை உணர்ந்துகொண்ட மணிவண்ணன் அதற்கு பதில் கூறாமல் புன்னகையுடன் சென்றுவிட்டார். மறுநாள் காகத்திற்கு சோறு வைக்கின்ற நேரம், காகம் தன் அலகில் ஒரு வெள்ளிக் கிண்ணத்தை எங்கிருந்தோ எடுத்து வந்து, மணிவண்ணனுக்கு பரிசாகக் கொடுத்தது. பளபளப்பாக மின்னும் அந்த வெள்ளிக் கிண்ணத்தை பார்த்த ராமன் உடனே ஓடோடி மணிவண்ணனிடம் வந்தான்.

''நண்பா'! என்ன இது ஆச்சரியமாக இருக்கிறது! இந்த காகம் உனக்கு வெள்ளிக் கிண்ணத்தை எடுத்து வந்துள்ளதே'' என்று வியப்போடு கேட்டான்.

அதனைக் கேட்ட மணிவண்ணன் சிரித்தபடியே, ''ராமா! நாம் ஒருவருக்கு உதவி செய்தால் நமக்கு ஏதாவது ஒரு வகையில் பலன் கிடைக்கும். இத்தனை நாட்களாக இந்தக் காகத்திற்கு நான் சோறு வைத்ததின் பயனாக, இந்தக் காகம் எனக்கு வெள்ளிக் கிண்ணத்தைக் கொடுத்துள்ளது. நாம் ஒருவருக்கு உதவி செய்தால்தான் நமக்குப் பிறரிடமிருந்து உதவிகள் கிடைக்கும். உன்னைப்போல் கருமித்தனத்தோடு எவரோடும் சேராமல் வாழ்ந்தால், யாருமே எந்த உதவியும் உனக்குச் செய்ய மாட்டார்கள்'' என்று கூறினார்.

மணிவண்ணன் கூறியதைக் கேட்ட ராமன் தன் தவறை எண்ணி மனம் வருந்தினான். ஒரு காகத்திற்கு இருக்கின்ற அறிவுகூட நமக்கு இல்லையே! என்று வேதனைப்பட்டான். அன்று முதல் தனது கருமித்தனத்தை விட்டு விட்டு ராமன் ஏழைகளுக்கு உதவி செய்ய ஆரம்பித்தான்.

# எழுதிப் படித்தால், மனதில் பதியும்!

மஞ்சுவிற்கு அன்று ஆங்கிலப் பரீட்சை. அதனால், அதிகாலையிலேயே எழுந்து படித்துக்கொண்டிருந்தாள். ஆனாலும்,' எத்தனை தடவை படித்தாலும் இந்த மனப்பாடப் பாட்டு மட்டும் மனதில் நிற்குதே இல்லையே!' என்று அலுத்துக்கொண்டாள்.



அப்போது கோலம் போடுவதற்காக வாசலுக்கு வந்த அவளது அம்மா ''என்ன மஞ்சு, பரீட்சைக்குப் படித்துவிட்டாயா?'' என்று கேட்டார்.

''இல்லை அம்மா. இந்த மனப்பாடப் பாட்டு மனதில் நிற்குதேயில்லை'' என்றாள்.

''பொறுமையாகப் படி'' என்றவாறே கோலம் போடத் தொடங்கினார் அம்மா.

இவர்களது உரையாடலைக் கேட்டவாறே, வெளியே வந்தார், மஞ்சுவின் அப்பா மோகன்.

''அப்பா, இந்தப் பாட்டு ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது'' என்றாள் மஞ்சு.

''அப்படியா'' என்றவர், தன் மனைவி கோலம் போடுவதைப் பார்த்தார். பின்னர், அவரிடம் ''ஏன் கோலத்தை அழித்து.அழித்துப் போடுகிறாய்'' என்று கேட்டார்.

''நேற்றுத்தான் இந்தக் கோலத்தை பத்திரிகையில் பார்த்தேன். சின்னக் கோலம்தானே என்று நினைத்து போட்டுப் பார்க்காமல் புள்ளியை வைத்துவிட்டேன். இப்போது எப்படி முடிப்பது என்று தெரியவில்லை. அதுதான் அழித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார் அம்மா.

அப்போது மஞ்சுவின் அப்பா,

''பார்த்தாயா, மஞ்சு, ஒரு சின்னக் கோலம்கூட, போட்டுப் பார்த்தால்தான் மனதில் நிற்கும். முதலில் கோலத்தைப் போட்டுப் பார்க்காமல் வாசலுக்கு வந்து போட்டதால்தான், உன் அம்மாவுக்கு கோலம் போடுவதற்கு கஷ்டமாக இருக்கிறது. அதனால்தான் அழித்து, அழித்து போட்டுக்கொண்டிருக்கிறார். அதனால், நீ வெறுமனே படித்தால் மட்டும் போதாது. ஒரு தடவைக்கு இரண்டு தடவை எழுதி,எழுதிப் பார்க்க வேண்டும். அப்போதுதான் மனதில் நன்றாகப் பதியும். புதிய பாடங்களை முதல் தடவை படிக்கும்போது, கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். அப்போது ஒன்றுமே புரியவில்லை என்று நினைத்து, படிக்காமல் விட்டுவிடக்கூடாது. அடுத்தடுத்து படிக்கும்போது, உனக்கு அது புரியும். பின்னர் நாலைந்து தடவைகள் எழுதும்போது, நன்றாக மனதில் பதிந்துவிடும். அதன்பின் நீ கஷ்டமாக இருக்கிறது என்று நினைத்த பாடமே, உனக்கு எளிதாகிவிடும். பரீட்சையிலும் நீ நன்றாக எழுதி, நிறையப் புள்ளிகளை வாங்கிடலாம்'' என்று உற்சாகம் கொடுத்தார், மோகன்.

''ரொம்ப நன்றி அப்பா'' என்றவாறே உற்சாகமாக மஞ்சு, எழுதிப்பார்ப்பதற்காக கொப்பியை எடுக்க ஓடினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන් ஆயுபோவன் வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மா-அப்பா-மகன்-மகள்-மாமா ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்

**තාත්තා: මාමා නුවර දුම්රිය ස්ථානයට එනව කිව්වද පුතා?**
மாமா நுவர தும்ரிய ஸ்தானயட்ட எனவா கிவ்வத புதா?
அப்பா: **மாமா கண்டி புகையிரத நிலையத்திற்கு வருவதாகச் சொன்னாரா மகன்?**

**පුතා: ඔව් තාත්තේ. මාමා නවයයි තිහට විතර වෑන් එක අරගෙන එනව කිව්වා.**
ஒவ் தாத்தே. மாமா நவயய் திஹட்ட விதற வேன் எக அறகென எனவ கிவ்வா.
மகன்: **ஆம் அப்பா. மாமா ஒன்பதரை மணி அளவில் வேனில் வருவதாகச் சொன்னார்.**

**දුව: තාත්තේ! දැන් නවයයි තිහට ළඟයි. නුවර දැන් ළඟද?**
தாத்தே! தென் நவயய் திஹட்ட லங்கய். நுவர தென் லங்கத?
மகள்: **அப்பா! இப்போது ஒன்பதரை மணியாகப் போகிறது. கண்டி அண்மித்துவிட்டதா?**

**තාත්තා: ඔව් දුව. ඊළඟට නුවර දුම්රිය ස්ථානය.**
ஒவ் துவ. ஈலங்கட்ட நுவர தும்ரிய ஸ்தானய.
அப்பா: **ஆம் மகள். அடுத்தது கண்டி புகையிரத நிலையம்.**

**අම්මා: මෙන්න, නුවර දුම්රිය ස්ථානය. දුව පරෙස්සමෙන් බහින්න.**
மென்ன, நுவர தும்ரிய ஸ்தானய. துவ பரெஸ்ஸமென் பஹின்ன.
அம்மா: **இதோ, கண்டி புகையிரத நிலையம். மகள் கவனமாக இறங்குங்கள்.**

**පුතා: තාත්තේ! අර එළියේ මාමා ඉන්නවා.**
தாத்தே! அற எளியே மாமா இன்னவா.
மகன்: **அப்பா! அதோ, வெளியே மாமா இருக்கிறார்.**

**අම්මා: මල්ලි, ගොඩක් වෙලාද ඇවිත්?**
மல்லி, கொடக் வெலாத எவித்?
அம்மா: **தம்பி, வந்து நிறைய நேரமா?**

**මාමා: නැහැ අක්කේ, දැන් තමා ආවේ.**
நெஹெ அக்கே, தென் தமா ஆவே.
மாமா: **இல்லை அக்கா. இப்போதுதான் வந்தேன்.**

**පුතා: මාමේ! මල්ලි ආවේ නැද්ද?**
மாமே! மல்லி ஆவே நெத்த?
மகன்: **மாமா! தம்பி வரவில்லையா?**

**මාමා: නැහැ පුතා, මල්ලි පන්ති ගිහින්. එහෙනම් අපි යමු නේද?**
நெஹெ புதா, மல்லி பந்தி கிஹின். எஹெனம் அபி யமு நேத?
மாமா: இல்லை மகன், தம்பி வகுப்புக்குப் போய் இருக்கிறான். அப்படியானால் நாங்கள் போவோமா?

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. இதோ, கண்டி புகையிரத நிலையம்.
..........................................................................
ii. மகள் கவனமாக இறங்குங்கள்.
..........................................................................
iii. மாமா வெளியே இருக்கிறார்.
..........................................................................






'Unless' எனும் இணைக்கும் சொல்லைக் (Joining Word) கையாண்டு ஒன்றிணைக்கப்படுகின்ற கலப்பு வாக்கியங்களை (Complex Sentence) மேலும் இங்கே பயில்வோம். இவை, நிபந்தனைகளுடன் கூடிய (Conditions) கலப்பு வாக்கியங்கள் என்பதை, நாம் மறந்துவிடக் கூடாது.

(அ) எனக்கு நேரம் கிடைக்காவிட்டால், என்னால் உனக்கு உதவ இயலாது.
Unless I have time, I can't help you.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

* எனக்கு நேரம் கிடைக்காவிட்டால்,
Unless I have time,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* என்னால் உனக்கு உதவ இயலாது.
I can't help you.
(பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)

(ஆ) நீ கடிதத்தை தெளிவாக எழுதாவிட்டால், என்னால் அதை வாசிக்க இயலாது.
Unless you write the letter clearly, I can't read it.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

* நீ கடிதத்தை தெளிவாக எழுதாவிட்டால்,
Unless you write the letter clearly,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* என்னால் அதை வாசிக்க இயலாது.
I can't read it.
(பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)

(இ) கமலன் கடுமையாக வேலை செய்யாவிடில், அவனால் அதிகம் சம்பாதிக்க முடியாது.
Unless Kamalan works hard, he can't earn more.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

* கமலன் கடுமையாக வேலை செய்யாவிடில்,
Unless Kamalan works hard,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* அவனால் அதிகம் சம்பாதிக்க இயலாது.
He can't earn more.
(பிரதம வாக்கியப் பகுதி - Principal Clause)

(ஈ) நந்தன் என்னைச் சந்திக்காவிட்டால், என்னால் அவனிடம் பணத்தைக் கொடுக்க இயலாது.
Unless Nanthan meets me, I can't give him the money.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

* நந்தன் என்னைச் சந்திக்காவிட்டால்,
Unless Nanthan meets me,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* என்னால் அவனிடம் பணத்தைக் கொடுக்க இயலாது.
I can't give him the money.
(பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)

(உ) ராஜு அனுமதியைப் பெறாவிடில், அவனால் வளவுக்குள் பிரவேசிக்க முடியாது.
Unless Raju gets the permission, he can't enter the premises.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

* ராஜு அனுமதியைப் பெறாவிடில்,
Unless Raju gets the permission,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* அவனால் வளவுக்குள் பிரவேசிக்க முடியாது.
He can't enter the premises.
(பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்



✱ 'இரும்பு மனிதன்' என அழைக்கப் பட்ட அப்போதைய சோவியத் ஒன்றியத் தினை சேர்ந்த தலைவர் யார்?
ஜோசப் ஸ்டாலின்



✱ 2 ஆம் உலக மகா யுத்தத்தின் பின்னர் நடைபெற்ற முதலாவது ஒலிம்பிக்போட்டி எந்த நாட்டில் நடைபெற்றது?
இங்கிலாந்தின் லண்டன் நகரில்



✱ யானைகள் எத்தனை பற்களைக் கொண்டுள்ளன?
04 பற்கள்



✱ கிழக்குத் தீமோர் நாடானது, இந்தோனேசியாவி டமிருந்து சுதந்திரம் பெற்றது எப்போது?
2002 ஆம் ஆண்டு



✱ கரீபியன் பிராந்தி யத்தில் அமைந் துள்ள மிகப் பெரிய தீவு எது?
கியூபா



✱ உலகப் புகழ் பெற்ற டைட்டானிக் கப்பலானது 1912 ஆம் ஆண்டு பனிப் பாறையில் மோதி விபத்துக்குள்ளா கிக் கடலில் மூழ்கி யது. டைட்டானிக் கப்பலானது எந்த நாட்டில் கட்டப்பட்டது?
அயர்லாந்து நாட்டில்

✱ 'ஸ்கேவி' நோயானது எந்த விற்றமின் குறைபாடு காரணமாக ஏற்படுகின்றது?
விற்றமின் 'C'



✱ கிறிஸ்தோபர் கொலம்பஸ் எத்தனையாம் ஆண்டு அமெரிக்க தேசத்தைக் கண்டுபிடித்தார்?
1492 ஆம் ஆண்டு



✱ ஆபிரிக்க கண்டத்தில் அமைந்துள்ள நாடுகளில் பரப்பளவில் மிகப்பெரிய நாடு எது?
சூடான்

✱ அவுஸ்திரேலியாவின் மாநிலங்களில் தீவாக அமைந்துள்ள மாநிலம் எது?
தஸ்மேனியா

✱ பாப்பரசராகப் பதவிவகித்த ஒரேயொரு ஆங்கிலேயர் யார்?
நிக்கலஸ் பிரேக்ஸ்பியர்



✱ 'ஒபெக்' அமைப் பில் அங்கம் வகிக்கின்ற தென் அமெரிக்க நாடு எது?
வெனிசுவேலா



✱ பிரிட்டன் நாட்டின் முதல்பரிசோதனைக் குழாய் குழந்தையின் பெயர் என்ன?
லூயிஸ் பிறவுண்

✱ பசுபிக் சமுத்திரத்துக் குப் பெயர்சூட்டியவர் யார்?
பேர்டினட் மகலன்



✱ ஐரோப்பாவின் மிக நீளமான நதி எது?
வொல்கா

✱ அந்தீஸ் மலை எந்த நாட்டில் அமைந்துள்ளது?
ஆர்ஜென்ரீனா


-தொகுப்பு:
கே.லோகநாதன்






அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# உலகின் மிக உயரமான பாலம் மெக்ஸிகோவில் திறந்து வைப்பு



உலகின் மிக உயரத்திலுள்ள பாலத்தை மெக்ஸிகோ ஜனாதிபதி பிலிப்பே சில தினங்களுக்கு முன்னர் திறந்து வைத்தார்.

வடக்கு மெக்ஸிக்கோவிலுள்ள 'மெட்ரி ஏஸிடென்ரல்' எனப்படும் மலைப்பிரதேசத்திலேயே இந்த பாலம் அமைக்கப்பட்டுள்ளது. மிகவும் ஆழமான பள்ளத்தாக்கின் மேலாக அமைக்கப்பட்டுள்ள இந்த பாலத்திற்கு 'பலூவா' என்று பெயரிடப்பட்டுள்ளது. 1,322 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த பாலம் 3,687 அடி நீளமுடையதாகும்.

ஸ்பெயின் நாட்டிடமிருந்து மெக்ஸிகோ சுதந்திரமடைந்த 200 வருட கொண்டாட்டத்தின்போதே, மேற்படி பாலம் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த வருட இறுதியில் பொது மக்களின் பாவனைக்கு இந்தப் பாலம் கையளிக்கப்படவுள்ளது. 'கின்னஸ்' உலக சாதனை ஏட்டிலும் உலகின் மிக உயரத்திலுள்ள பாலமாக இது பதியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளவரசி கேட் சாரணர் ஆகிறார்



பிரிட்டன் இளவரசர் வில்லியத்தின் மனைவியான இளவரசி கேட் சாரணர் இயக்கத்தில் இணைவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தொண்டு நிறுவனங்கள் பல தமக்கு ஆதரவு வழங்குமாறு தொடர்ச்சியாக இளவரசி கேட்டிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே, அவர் சாரணர் இயக்கத்தில் இணைந்து கொள்ள இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே இவர் 1990 ஆம் ஆண்டில் 8 வயதாக இருக்கும்போது, 'செண் என்ட்றுஸ் பிரவுணி' என்ற சாரணர் இயக்கத்தில் இணைந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 343

கேள்வி: உலகின் மிக உயரமான பாலத்தின் பெயர் என்ன?

சரியான விடை........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 343,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

## போட்டி இல - 341 இன் சரியான விடை: 65 மொழிகளில்

பரிசு பெறுவோர்

கே.சுதர்ஷன்,
குட்ஷெட் வீதி, தோனிக்கல்,
வவுனியா.

எஸ்.ஸப்னா,
தர்கா மாவத்தை, சிலாபம்.


ஆர்.சுமதி,
எஸ்.எல்.எம்.வத்தை, றம்புக்கன.

# 'பேச்சுவார்த்தைக்குத் தயார்'

## ஈரான் அறிவிப்பு

அணு ஆயுத உற்பத்தி தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட தமது நாடு தயாராக இருப்பதாக ஈரான் அறிவித்துள்ளது.






ஈரான் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட்டு வருவதாக மேற்குலக நாடுகள் பல குற்றஞ்சாட்டி வருகின்றன. ஆனால், தாம் ஆக்கப் பணிக்காக மட்டுமே அணுசக்தியைப் பயன்படுத்தி வருவதாக ஈரான் தெரிவித்து வருகின்றது. ஆனால், இந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கின்ற மேற்குலக நாடுகள், ஈரானை தமது வழிக்குக் கொண்டுவரும் நோக்கில் ஈரான்மீது பொருளாதார தடைகளை விதித்திருந்தன.

அத்தகைய நிலையிலும் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஈரான் ஏவுகணைப் பரிசோதனையொன்றை நடத்தியிருந்தது. இது மேற்குலகை மேலும் சீற்றமடைய வைத்துள்ளதால் ஈராக் மீதான பொருளாதார தடையை மேலும் விரிவுபடுத்தி மேலும் பல தடைகளை விதிப்பதற்கும் அவை தயாராகி வருகின்றன. இதனையடுத்தே, ஈரான் தாம் அணு ஆயுத உற்பத்தி தொடர்பான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக தெரிய வருகின்றது. எனவே, பேச்சுவார்த்தைகளுக்கான இடம் திகதி குறித்த அறிவிப்பிற்காக காத்திருப்பதாகவும் ஈரான் அறிவித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட் சபை தேர்தல் குறித்துப் புகார்

இலங்கை கிரிக்கெட் புதிய நிர்வாக சபைக்கான தேர்தலில் தலைவர் உட்பட ஏனைய நிர்வாகிகள் பலரும் போட்டியின்றி தெரிவாகியிருந்த முறை குறித்துத் தனது அதிருப்தியை ஐ.சி.சி.யிடம் இலங்கை அணியின் முன்னாள் வீரர் ஹஷன் திலகரட்ன முறைப்பாடாக முன்வைத்துள்ளார்.






அரசியல் தலையீடுகளின் மூலமாக நேர்மையற்ற விதத்தில் மேற்படி கிரிக்கெட் சபை தேர்தல் நடைபெற்றதாகவும், போட்டியில் கலந்துகொள்ளவிருந்த பலர் இறுதி நேரத்தில் போட்டியிலிருந்து விலகிக் கொண்டதாகவும் இதன் காரணமாகவே ஏராளமானவர்கள் போட்டியின்றி தெரிவாவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது என்றும் ஹஷான் திலகரட்ன தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தலையீட்டின் காரணமாக முறையற்ற ரீதியில் நடைபெற்ற இந்த தேர்தல் ஐ.சி.சி.யின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டதாக அமையவில்லை என்றும் குற்றஞ்சாட்டியுள்ள ஹஷான் திலகரட்ன இது குறித்து ஐ சி சி கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஆசிப் மேல் முறையீடு



பாகிஸ்தான் அணியின் சூதாட்டக் குற்றத்திற்கு ஆளாகிய ஆசிப், தன்மீதான தடையை எதிர்த்து மேல் முறையீடு செய்துள்ளார். ஸ்பொட் ஃபிக்ஸிங் முறையில் சூதாட்டம் புரிந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே ஆஸிப் மீது நீதிமன்றம் 5 வருட போட்டித் தடை விதித்து தீர்ப்பு வழங்கியிருந்தது. இந்த தீர்ப்பை எதிர்த்தே அவர் சுவிட்ஸர்லாந்திலுள்ள விளையாட்டு நடுவர் நீதிமன்றத்தில் தனது மேல் முறையீட்டைச் செய்துள்ளார்.

ஏற்கனவே பிரிட்டனிலுள்ள நீதிமன்றமொன்று ஆசிப், சல்மன் பட், மொஹமது அமிர் ஆகியோருக்கு எதிராக சிறைத்தண்டனை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


## விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) | |
|---|---|---|---|
| 6 மாதத்திற்கு | - ரூபா 390/= | 6 மாதத்திற்கு | - ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு | - ரூபா 780/= | 1 வருடத்திற்கு | - ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர் - ..............................

..............................

முகவரி - ..............................

..............................

தொ.பேசி - ..............................

பத்திரிகையின் பெயர் - ..............................

விஜய் Subscription

For 6 Months/ 1 Year

(அவசியமற்றதை வெட்டிவிடவும்)

..............................

கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:

**SUBSCRIPTION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**


# இந்திய அணியின் தோல்வியால் முன்னாள் தலைவர்கள் சீற்றம்



அவுஸ்திரேலியா-இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியில் இந்திய அணி பலத்த பின்னடைவைச் சந்தித்தமையால் அவ்வணிக்கு எதிராகப் பலத்த விமர்சனங்கள் எழுந்துள்ளன. குறிப்பாக இந்திய அணியின் முன்னாள் தலைவர்கள் கடுமையான தொனியில் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

முன்னாள் தலைவர் கபில்தேவ் இது குறித்து தெரிவிக்கையில்: "சிறப்பாக விளையாடாதவர்களை அணியிலிருந்து தூக்கி எறிய வேண்டும்" என கூறியுள்ளார். மேலும் தெரிவித்துள்ள அவர் "முன்வரிசை வீரர்கள் எவரும் போதிய ஓட்டங்களை எடுக்காத நிலையில் டோனியால் என்னதான் செய்ய முடியும்? ஆகையால், இது விடயத்தில் டோனி கடுமையாக நடந்துகொள்ளவேண்டும். அவர் தனக்குத் தேவையான வீரர்களை அவரே தெரிவு செய்யவேண்டும். இளம் வீரர்களை அணிக்கு கொண்டுவர வேண்டும். கடுமையான போக்கினை அவர் கையாண்டால்தான் அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும்" என்று குறிப்பிட்டுள்ளார்.





இதேவேளை, மற்றுமொரு முன்னாள் தலைவரான சுனில் கவஸ்கர் தெரிவிக்கையில், "இந்திய வீரர்கள் போட்டியில் வெற்றியீட்டுவதற்கு தேவையான முன் பயிற்சிகளில் ஈடுபடவில்லை. அவர்கள் அவுஸ்திரேலியாவில் ஊரைச் சுற்றிப் பார்ப்பதிலேயே காலத்தைக் கடத்தினர். இத்தகைய பொறுப்பற்ற தன்மையிலிருந்து இந்திய வீரர்கள் மாறவேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# 2018 உலக ஸ்னூக்கர் போட்டிகள் இலங்கையில்...

2018 ஆம் ஆண்டிற்கான உலகக் கனிஷ்ட ஸ்னூக்கர் போட்டிகள் இலங்கையில் நடைபெறும் என்று இலங்கை பிலியட் மற்றும் ஸ்னூக்கர் சங்கத்தின் தலைவர் ஹஃபிர் ரஜாப்தீன் தெரிவித்துள்ளார்.

நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறுகின்ற உலகக் கனிஷ்ட ஸ்னூக்கர் போட்டிகளில் 2018 ஆம் ஆண்டிற்கான போட்டியை இலங்கையில் நடத்துவதற்கு சர்வதேச பிலியட் மற்றும் ஸ்னூக்கர் சங்கம் அனுமதி அளித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள சங்கத்தின் தலைவர் ரஜாப்தின் தாம் இது குறித்து விளையாட்டுத்துறை அமைச்சருடன் கலந்து பேசியிருப்பதாகவும், கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் இப்போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாகவும் போட்டிக்குத் தேவையான ஸ்னூக்கர் போட்டி மேசைகளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இப்போட்டிகளை இலக்காகக் கொண்டு கனிஷ்ட பிரிவு போட்டியாளர்களுக்கென ஐந்து வருட அபிவிருத்தித் திட்டமொன்றையும் பிலியட் மற்றும் ஸ்னூக்கர் சங்கம் அமைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் இதற்கு முன்னர் 2000 ஆம் ஆண்டில் உலகக் கனிஷ்ட ஸ்னூக்கர் போட்டிகள் நடைபெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளார்க்கின் முச்சதத்தால் விளம்பர ஒப்பந்தங்கள்



இந்தியா-அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையே நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் முச்சதம் (முன்னூறு ஓட்டங்கள்) பெற்றமையின் பெறுபேறாக அவரை தமது விளம்பரங்களுக்கு பயன்படுத்திக்கொள்வதற்கு நிறுவனங்கள் பல ஆர்வம் காட்டி வருகின்றன. இதில் குறிப்பாக 'ஸ்பொர்டன் ஸ்போர்ட்ஸ்' என்ற நிறுவனம் கிளார்க் பாவிக்கும் மட்டையை தமது விளம்பரத்திற்கு பயன்படுத்திக் கொள்வதற்கு கிளார்க்குடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்கென 98 ஆயிரத்து 315 அவுஸ்திரேலிய டொலர்களை வழங்க அந்நிறுவனம் முன்வந்துள்ளது.

இதற்கமைய, அடுத்து வரும் மூன்று வருடங்களுக்கு மேற்படி நிறுவனத்தின் சின்னத்தை பொறித்த துடுப்பாட்ட மட்டையையே மைக்கல் கிளார்க் போட்டிகளில் பயன்படுத்துவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளிப் பயணத்தில் மனிதனின் சாதனைகள்



விண்வெளி வீரர்களை அழைத்துக்கொண்டு ஏராளமான ரொக்கெட்களும் விண்கலங்களும் விண்வெளியை சென்றடையும் நிகழ்வுகள் இன்று நேற்று அல்ல- சுமார் 50 வருடங்களுக்கு முன்பிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை தவிர; ஆளில்லா விண் கலங்கள், ரொக்கெட்களும் விண்வெளியில் ஏவப்பட்டுள்ளன; ஏவப்பட்டுக்கொண்டிருக்கின்றன. செய்மதிகளும் இவற்றில் உள்ளடங்குகின்றன. இவற்றினூடாக; கிரகங்கள், நட்சத்திரங்கள் உட்பட, பல்வேறு விண்பொருட்களில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படு கின்றன. இந்த விண்வெளி நடவடிக்கைகளினூடாக, காலத்துக் குக் காலம் பல புதிய, அதிசய, ஆராய்ச்சித் தகவல்களை நாம் அறியக் கூடியதாக இருக்கின்றன. ஆக, இந்த வெற்றிகளுக்குப் பின்னால் நிற்பவர்கள் மனிதர்களே! அந்தவகையில், விண்வெளியில் மனிதன் சாதனைகள் புரிய ஆரம்பித்து சுமார் 54 வருடங்கள் கழிந்துவிட்டன என்றே கூறவேண்டும்.

மனித வரலாற்றில் முதன்முதலாக விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டு வெற்றிகரமாக பூமி திரும்பியவர் ரஷ்யாவைச் சேர்ந்த யூரி ககாரின் ஆவார். இவர், தனது வீரப் பயணத்தை கசகஸ்தானிலுள்ள பைகனூர் விண்வெளி ஏவு தளத்திலிருந்து 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி மேற்கொண்டிருந்தார். இன்றைய 'ரஷ்யா' அன்று 'ஐக்கிய சோவியத் சமவுடமைக் குடியரசு' என அழைக்கப்பட்டது. அப்போது, ஐக்கிய அமெரிக்காவுடன் பனிப்போரில் ஈடுபட்டிருந்த சோவியத் ரஷ்யா, வல்லரசாக உருவானதும் பல வெற்றிகரமான முன்னெடுப்புகளை நோக்கி அடியெடுத்து வைத்ததும் யூரி ககாரினின் இந்த வெற்றிகரமான விண்வெளிப் பயணத்தின் பின்பே ஆகும்.

## விண்வெளிப் பயணத்தின் மைல்கற்கள் சில....

### 1950 களில்...

**1957 ஒக்:4**
சோவியத் ரஷ்யாவினால் உலகின் முதலாவது செய்மதி 'ஸ்புட்னிக் 1' விண்வெளிக்கு ஏவப்பட்டது.

**1957 நொவெ: 3**
'ஸ்புட்னிக்-2' விண்கலத்தில் 'லைக்கா' எனும் நாய் புவிச்சுற்றுப் பாதைக்கு அனுப்பப்படல். அப்பயணத்தின்போது, லைக்கா உயிரிழந்தது.

**1958 ஜனா: 31**
ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்மதியான 'எக்ஸ்ப்ளோரர்' விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.

### 1960 களில்...

**1961 ஏப்ரல்: 12**
'விண்வெளிக்குச் சென்ற முதலாவது மனிதன்' என்ற பெருமையை யூரி ககாரின் பெற்றுக்கொண்டார்.

**1965 மார்ச்: 18**
'விண்வெளியில் நடந்த முதலாவது மனிதன்' என்ற சாதனையை ரஷ்யாவின் எலெக்ஸி லியனோவ் நிலைநாட்டினார்.

**1966 பெப்: 3**
சந்திரனின் மேற்பரப்பில் சோவியத் ரஷ்யாவின் 'லூனா-9' என்ற விண்கலம் முதன்முதலில் தரையிறங்கியது.

**1969 ஜூலை: 20**
நீல் ஆம்ஸ்ட்ரோங், எட்வின் ஒல்ட்ரின் ஆகியோர் சந்திரனில் காலடி வைத்த முதல் மனிதர்களாக வரலாற்றில் இடம்பிடித்தனர்.

### 1970 களில்....

**1970 ஏப்ரல்**
விண்வெளியில் வெடிப்புக்குள்ளாகிய 'அப்பலோ 13' விண்கலத்தில் பயணித்த விண்வெளி வீரர்களை நாஸா பாதுகாப்பாக புவியில் தரையிறக்கியது.

**1970 ஏப்: 24**
சீனா தனது முதலாவது செய்மதியை விண்வெளிக்கு அனுப்பியது.

**1975 ஜூலை 15**
அமெரிக்காவின் 'அப்பலோ 18' விண்கலமும் சோவியத் ரஷ்யாவின் 'சோயுஸ்-9' விண்கலமும் விண்வெளியில் இணைந்தன.

**1976 ஜூலை 20**
அமெரிக்காவின் 'வைகிங் 1' என்ற ஆய்வுக்கலம் செவ்வாயின் மேற்பரப்பில் தரையிறங்கியது.

**1977 ஒக்: -செப்:**
'வொயேஜர் 1' மற்றும் 'வொயேஜர் 2' ஆகிய விண்கலங்கள் ஞாயிற்றுத் தொகுதியிலிருந்து வெகுதூரத்தில் அமைந்துள்ள கோள்களை ஆய்வுசெய்வதற்காகப் புறப்பட்டன.

**1979 டிச: 24**
'ஏரியேன் 1' என்ற ரொக்கெட் விண்வெளிக்குப் பயணித்ததை அடுத்து, விண்வெளி ஆய்வில் ஐரோப்பா காலடி வைத்தது.

### 1980 களில்...

**1982 ஜூன் 25**
முதலாவது பிரான்சியராக ஜீன் லூப் க்ரேட்டீன் விண்வெளிக்குச் சென்றார்.

**1986 ஜனா: 28**
அமெரிக்காவின் செலெஞ்சர் விண்கலம் விண்ணில் வெடித்துச் சிதறியதில் அதில் பயணித்த 7 விண்வெளி வீரர்களும் மரணித்தனர்.

**1986 பெப்:19**
சோவியத் ரஷ்யா தனது 'மீர்' விண்வெளி நிலையத்தை விண்வெளிக்கு அனுப்பி வைத்தது.

### 1990 களில்...

**1990 ஏப்: 28**
ஹபல் தொலைக்காட்டி புவிச் சுற்றுப்பாதையில் தரித்து நிற்றல்

**1998 நொவெ: 20**
சர்வதேச விண்வெளி நிலையத்தை ஒன்றுசேர்க்கும் நடவடிக்கையை ஆரம்பித்தல்.

### 2000 ஆம் ஆண்டின் பின்..

**2001 ஏப்: 28**
முதலாவது விண்வெளி சுற்றுலாப் பயணியாக அமெரிக்கரான டெனிஸ் அன்டனி டிட்டோ விண்வெளிக்கு சுற்றுலா சென்றார்.

**2003 பெப்: 1**
கொலம்பியா விண்கலம் வெடித்துச் சிதறியதால், அதில் பயணித்த 7 விண்வெளிவீரர்களும் மரணித்தனர்.


**2003 ஒக்: 15**
மனிதனை விண்வெளிக்கு அனுப்பிய மூன்றாவது நாடு என்ற பெருமையை சீனா பெறுதல்.

**2005 ஜனா: 14**
ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையத்தின் 'ஹியுஜன்ஸ்' ஆய்வுக்கலம் சனிக்கிரகத்தின் டைட்டன் உபகோளின் மேற்பரப்பில் தரையிறங்கியது.

**2006 ஜனவரி**
அமெரிக்காவின் 'நிவ் ஹொரைஸன்' எனும் விண்கலம் புளூட்டோவை ஆய்வுசெய்யும் நோக்கில் விண்வெளி நோக்கிப் பயணம்.

**2008 ஒக்டோபர்**
இந்தியா தனது முதலாவது ஆளில்லா விண்கலத்தை சந்திரனுக்கு அனுப்பியது.

**2011**
நாஸாவின் மூன்று விண்கலங்களுமான டிஸ்கவரி (பெப்ரவரி), எண்டவர் (மே), அட்லாண்டிஸ் (ஜூலை) என்பன தமது விண்வெளிப் பயணங்களிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டன.




AFP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்: அரசியல்



## வின்சன்ட் சர்ச்சில்

**(1874-1963)**

**1874** ஆம் ஆண்டு நொவெம்பர் 30 ஆம் திகதி ராண்டல்ப் பிரபுவுக்கு மகனாகப் பிறந்தார் வின்சன்ட் சர்ச்சில். கல்வியில் சளைத்தவரல்ல என்பதை சிறு வயதிலேயே நிரூபித்திருந்தார். வீரமும் தைரியமும் அவருடன் கூடப் பிறந்த குணாதிசயங்களாகவும் இருந்தன. இவரை தேசப்பற்றின் பிதா என்றுகூட சொல்லலாம்.

பிரித்தானிய இராணுவத்தில் சேர்ந்த சர்ச்சில் இந்தியா, எகிப்து என்று பல நாடுகளிலும் போர் புரிந்தார். இதனால், யுத்தம் அவருக்குப் பிடித்துப்போனது. நாட்டையும் அவ்வழியிலேயே வழி நடத்த வேண்டும் என நினைத்தார்.

தனது 27 ஆவது வயதில் பிரிட்டனின் நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார். கட்சி மாறிய இவர், கன்சர்வேடிவ் கட்சியில் இருந்து லிபரல் கட்சிக்கு மாறினார். உலகின் பெருந்தலைவர்களில் பலரைப்போல் இவரிடமும் பேச்சாற்றல் நிறைந்திருந்தது. இந்த ஆற்றல், 1940 ஆம் ஆண்டு பிரதமரான பின்னரும் அவருக்கு உதவியது. 1939 ஆம் ஆண்டு இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமாகியிருந்தது. ஹிட்லர் தொட்டதெல்லாம் வெற்றி! அவர் நினைத்தது நடந்தது. இங்கிலாந்தும் அடிமையாகிவிடுமோ என்று உலகமே பார்த்துக்கொண்டிருந்த சமயம் முழங்கினார் சர்ச்சில்.

''நாம் அடிபணியமாட்டோம்; போராடுவோம்! வெற்றி நமக்கே....'' என்று கூறி இங்கிலாந்தைப் போருக்காக தயார்செய்தார். படை பலத்தை மட்டுமல்ல; இங்கிலாந்து மக்களின் மனபலத்தையும் வலுவடையச் செய்தார். இங்கிலாந்து மீது குண்டுகள் மழைபோல் பொழிந்தன. அசரவில்லை சர்ச்சில்! வியூகங்களை மதிநுட்பமாக வகுத்தார். தந்திரமான திட்டங்களைத் தீட்டினார். கடல், ஆகாயம், தரை என மூன்று வழிகளிலும் போரை சளைக்காமல் கொண்டு நடாத்தினார். எதிர்ப்புகளுக்கும் பஞ்சமிருக்கவில்லை. மக்கள், எதிர்க்கட்சி, தன்கட்சியிலிருந்தும் கூட எதிர்ப்புகள் எழுந்தன. ஆனால், சர்ச்சிலின் சிந்தனை முழுவதும் போரிலேயே இருந்தது. மக்களின் மனங்கள் சோர்வடைந்தால் நாடும் வலுவிழந்துவிடும் என்பதை உணர்ந்திருந்தார். இந்தச் சூழ்நிலையில் இன்னொரு தலைவரால் இவ்வாறு நிலைத்து நின்றிருக்க முடியுமா என்பது கேள்விக்குறியே!.

அனைத்திற்கும் பலன் கிடைத்தது. 1945 இல் ஜேர்மன் சரணடைந்தது; ஹிட்லர் தற்கொலை செய்துகொண்டார். அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் துணையோடு போராடிய பிரிட்டனுக்கு வெற்றி கிட்டியது. சர்ச்சிலின் பதவிக்காலமும் முடிவடைந்தது. 1950 களில் (1951-55) மீண்டும் தனது 80 வயதில் பிரதமரானார். போரின் பின்னர் அமைதியான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருந்த வின்சன்ட் சர்ச்சில் 1965 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி தனது 90 ஆவது வயதில் இறையடி எய்தினார்.

**-ஆர்.ஜே**

# வௌவால்கள் பற்றிய சுவாரஸ்யமான தகவல்கள்

வௌவால்கள் எவ்வாறு திசைகளைக் கண்டுபிடித்துப் பறக்கின்றன என்பதைக் கண்டறிய ஒரு G.P.S கருவியை ஜெருசலேம் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர். தங்களது இலக்குகளை திறம்பட நிர்ணயம் செய்வதில் வீட்டுப் புறாக்களைவிட, பழ மரத்து வௌவால்கள் திறமையானவை என இவர்கள் கண்டறிந்துள்ளனர்.

எகிப்திலுள்ள பழ வௌவால்கள், மலைகள் மற்றும் மக்கள் குடியிருப்புக்களில் தெரியும் வெளிச்சம் போன்றவற்றை அடையாளமாக வைத்தே வேறு இடங்களுக்கு செல்லவோ அல்லது மீண்டும் அதே இடத்துக்கு வந்தடையவோ செய்கின்றனவாம். சூரியஒளி இல்லாத காலங்களில் அவை ஏதோ ஓர் உள்ளுணர்வின் அடிப்படையிலேயே, தங்களது



இலக்குகளை மிகத் துல்லியமாகக் கணிக்கும் ஆற்றல் பெற்றவை என இந்த ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.



சில வௌவால்களின்மீது ஒரு G.P.S கருவியை இணைத்து, அவற்றை ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து பறக்க விட்டனர். அவை சுமார் 25 கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஒரு பழ மரத்திற்குப் பறந்து சென்று, மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே திரும்பின. ஆனால், அதேபோன்ற பழ மரங்கள், வௌவால்கள் பறந்து சென்ற வழியின் அருகில் இருந்தாலும்கூட, அவை தாங்கள் வழக்கமாகச் செல்லும் ஒரு குறிப்பிட்ட மரத்திற்கே சென்று வந்தமை தெரியவந்தது. அதனையும் விட சுவாரஸ்யமான விடயம் பட்டினியாக இருந்த வௌவால்கள் சிலவற்றையும் அவற்றின் இருப்பிடத்தைவிட்டு, வெகு தொலைவுக்கு கொண்டு சென்று பறக்க விட்டனர். இந்த வௌவால்களும் தாம் வழக்கமாகச் செல்லும் பழ மரங்களுக்கு சென்று பின்னர் தங்களது சரியான இருப்பிடத்திற்குத் திரும்பியமையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

படத்தை இங்கே ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:.....................................

முகவரி:.....................................

.....................................

பாடசாலை:.....................................

வகுப்பு:.....................................

திகதி: .....................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

# புதிய வருடத்தில் திட்டமிடலுடன் செயற்படுவோம்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்லவும் முயல்வதோடு, அதற்கான தீர்வை பெறுவதில் நீங்கள் உரிய கவனம் செலுத்துங்கள்.

### பொறுப்புக்களை மிகத் தெளிவாக இனங்காணுங்கள்

நன்றாகக் கல்வி கற்பதோடு, உங்கள் வீடுகளில் நீங்கள் மேற்கொள்ள வேண்டிய சிறு சிறு பொறுப்புகளும் பல உள்ளன. சமையலறை வேலைகளுக்கு அம்மாவிற்கு உதவுதல், தம்பி தங்கைகளுக்கு உதவி செய்தல், தத்தமது ஆடை, அணிகளை தாமே கழுவுதல், வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுதல் என்பன இத்தகைய பொறுப்புக்களில் சிலவாகும். இத்தகைய செயற்பாட்டில் மிகுந்த விருப்புடன் ஈடுபட வேண்டும். உதவ வேண்டும். இதன்மூலம் வீட்டில் உள்ளவர்களுடனான தொடர்பையும் அன்பையும் அதிகரிக்க நல்லதொரு சந்தர்ப்பம் கிடைக்கும்.

### பொழுதுபோக்கு அம்சங்களுக்கும் இடமளியுங்கள்

ஏனைய அனைத்து விடயங்களைப் போலவே பொழுதுபோக்கு அம்சங்களும் வாழ்க்கைக்கு மிக அவசியம். அத்தகைய பொழுதுபோக்கு அம்சங்களில் மன வளர்ச்சியும் மகிழ்ச்சியையும் தரும் பொழுதுபோக்கு அம்சங்களைத் தெர் செய்யுங்கள். ஓவியம், நடனம், இசை, பாடல் போன்ற விடயங்களில் அல்லது நல்ல நூல்களை வாசிப்பதில் உங்கள் நேரத்தை செலவழிப்பது மிகவும் சிறப்பானதாகும். இத்தகைய பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபடுவது உங்கள் கல்வி நடவடிக்கைகளுக்கு தேவையான உடல், உள இறுக்கத்தை தளர்த்தி இலகுவாக்கும்.

### நண்பர்களுக்கும் இடமளியுங்கள்

நண்பர்கள் உங்க வாழ்க்கைக்கு மிக நெருக்கமானவர்கள். இந்நண்பர் குழுவில் உங்களின் பெற்றோர்களையும் சகோதர சகோதரிகளையும் ஆசிரியர்களையும் இணைத்துக் கொள்ளுங்கள். இவர்களை நண்பர்களாக உங்கள் வாழ்வில் நெருக்கமாக்கிக் கொள்ளுங்கள். இதன்மூலம் உங்கள் மனதில் ஏற்படும் எத்தகைய மன அழுத்தங்களும் அழுத்தம் நிறைந்த எண்ணங்களையும் அவர்களோடு பகிர்ந்துகொள்ள நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும். அத்தோடு, அவர்களின் உதவிகளைப் பெற வாய்ப்புக் கிடைப்பதோடு அந்நியோன்ய உறவும் தொடர்பும் வளர சரியான சந்தர்ப்பமாகவும் அமையும்.

(-அ)

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 4456

எஃப்.ஸுமையா, மஸ்ஸல, பேருவளை.



அங்.இல: 4457

எம்.கௌசிகன், போற்றி தோட்டம், நோர்வூட்.



அங்.இல: 4458

ல.குணாளன், கபரகல வீதி, மடுல்கலை.



அங்.இல: 4459

சி.பவதாரணி, தலைமன்னார்.



அங்.இல: 4460

எச்.எஃப்.நிஸ்பா, வெலம்பொட, கம்பளை.



அங்.இல: 4461

கு.மதுமிதா, சிவன்கோவில் வீதி, தோணிக்கல்.



அங்.இல: 4462

கே.அமாஸ்கான், ஸ்பில் வீதி, புத்தளம்.



அங்.இல: 4463

எஸ்.எஸ்.ரம்லா, தல்துவ, அவிசாவளை.



அங்.இல: 4464

எஸ்.மயூரராஜ், அல்வாய் தெற்கு, பருத்தித்துறை.



அங்.இல: 4465

கே.கௌஷான், பல்லகொட தோட்டம், தர்கா நகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நள்ளிரவில் சூரியன் உதிக்கும் அதிசயம்

சூரியன் காலையில் உதிக்கும்; மாலையில் மறையும். இது நாமனைவரும் அறிந்த விடயம். ஆனால், நள்ளிரவில் சூரியன் உதிக்கின்றதென்பது நம்மில் பலரும் அறியாத அதிசயமான விடயமாகும். புவியின் வடதுருவங்களிலேயே இவ்வாறான அதிசயம் இடம்பெறுகின்றது. இப்பகுதிகளில் சூரியன் மறைவதே இல்லை. மேலும் ஜூன், ஜூலை மாதங்களில் இங்கு எப்போதும் பகலாகவே இருக்கும்.

இதற்கான காரணம் புவியின் வட துருவமானது, ஒரே அச்சில் மேல் நோக்கி சுழல்வதே ஆகும். இவ்வாறு சுழலும்போது பகலானது நள்ளிரவு வரை தொடர்கின்றது. அதன்படி மறுநாளும் சூரியன் மறையாமல் அவ்வாறே காட்சிதரும்.

புவியின் சுற்றுகையே சூரியன் மறையாமல் அவ்வாறே காணப்படுவதற்கான காரணம் என்றும் நள்ளிரவிலும் சூரியனைப் பார்ப்பது தமக்குக் கிடைத்த அற்புதமான அனுபவம் என்றும் இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேபோன்று, டிசம்பர், ஜனவரி மாதங்களில் இந்தப் பகுதிகளில் சூரியனைப் பார்க்கவே முடியாத அதிசயமும் இங்கு நிகழ்கின்றது. வட ஆர்ட்டிக் பகுதியில் ஸ்கெண்டிநேவியா, நோர்வே, சுவீடன், டென்மார்க், ஐஸ்லாந்து, பாரோ தீவுகள், பின்லாந்து போன்ற நாடுகள் உள்ளன.

### அதிகரிக்கும் வெப்பவாயு வெளியேற்றம்;

# துரிதமடையும் புவிவெப்பம்!






வெப்பத்தை ஏற்படுத்தும் வெப்ப வாயுக்களின் தேக்க அளவு வளிமண்டலத்தில் கடுமையாக அதிகரித்து வருவதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். மேலும், அங்கு புவி வெப்பமடைதல் செயற்பாடுகள் [illegible]டுகளவு கூட குறைவதற்கான சுவடுகளே இல்லை என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். ஐ.நா.வானிலை அமைப்பின் சமீபத்தைய வெளியீட்டின்படி, மிகவும் அபாயகரமான மூன்று வெப்ப வாயுக்களின் அளவு பாரிய அளவில் அதிகரித்திருப்பதாகத் தெரியவந்துள்ளது. அது மட்டுமன்றி; அவை அதிகரிக்கும் விகிதமும் குறைவதாக இல்லை என்றும் குறிப்பிடுகின்றனர்.

மேலும், கொபன்ஹேகன் மாநாட்டில் நிர்ணயிக்கப்பட்ட வெப்பவாயு வெளியேற்றக் குறைப்பு விகிதம் எந்தவகையிலும் புவி வெப்பமடைதல் வேகத்திற்கு இணையாக இருக்கப்போவதில்லை என்பதும் தெரியவருகின்றது.

வெப்ப வாயுக்கள் எந்தளவுக்கு இருந்தால் பாதுகாப்பானது என்பதுபற்றி விஞ்ஞானிகள் இன்னமும் கணிக்கவில்லை.ஆனால், அதிகரிக்கும் வெப்பவாயுத் தேக்கத்தினால் புவி வெப்பம் அதிகரித்து, துருவப்பனிகளை உருக்கிவிட்டால், கடல் நீர்மட்டம் இந்த நூற்றாண்டில் பல அடிகள் உயரலாம் எனவும்





கூறப்படுகின்றது. எனவே, இந்த வெப்ப வாயு வெளியேற்றத்தை எவ்வாறு குறைக்கலாம் என்பது பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# குளிர் நேரங்களில் கைவிரல்களில் சுருக்கம் விழுவது ஏன்?

நீருக்குள் கைகளை நீண்ட நேரம் அமிழ்த்தி வைக்கும்போது, விரல்களின் தோலில் சுருக்கங்கள் விழும். எமது உடலை மூடியிருக்கும் தோலின் மேற்பகுதிதான் உள்ளே இருக்கும் இழையங்களை பாதுகாக்கின்ற பணிகளைச் செய்கின்றது. அதுவும் அதிகளவில் உராய்வு ஏற்படக்கூடிய உள்ளங்கை, உள்ளங்கால் போன்ற பகுதிகளில் அதிக பாதுகாப்பு தேவைப்படுகின்றமையால், மேற்புறத்தோல் சிறிது தடிப்பாகக் காணப்படும்.

இது கொழுப்பு மற்றும் புரதங்களால் ஆன தடிப்பாகும். அதனால், நீரிலோ அல்லது பனிக்காலங்களில் உண்டாகும் குளிரின்போதோ வெளியில் உள்ள நீரை உறிஞ்ச ஆரம்பிக்கும். அதுவும் உள்ளங்கை தோல் அதிகமாக தடித்திருப்பதால் அதிகமாகவே நீரை உறிஞ்சுகின்றது. நீரை உறிஞ்சுவதால் தோலின் அளவு விரிவடைகின்றது. அவ்வாறு விரிவடையும்போது, தோலில் மடிப்புகள் ஏற்படுகின்றன. இதுவே எமக்கு சுருக்கங்களாகத் தெரிகின்றது. உறிஞ்சிய நீரைத் தோல், நீராவியாக வெளியேற்றும்போது மறுபடியும் தோல் பழைய நிலையை அடைகின்றது.





# உலகின் மிகப் பழைமையான செயற்கை உறுப்பு

இங்கிலாந்து நாட்டின் மேன்செஸ்டர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தலைமை ஆராய்ச்சியாளர் ஜேக்கி பின்ச் என்பவர் எகிப்து நாட்டின் புகழ்பெற்ற மம்மிகள் பற்றிய ஓர் ஆய்வினை மேற்கொண்டார். அதன்படி, அங்குள்ள மம்மி ஒன்றின் வலது கால் பெருவிரல் ஒன்று உறுப்பு மாற்றுச் சிகிச்சையின்படி, ஒன்றிணைக்கப் பட்டுள்ளதாகப் பின்ச் நடாத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது. மேலும், மனித உடலின் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைக்கு முன்னோடியான எகிப்து நாட்டின் கெய்ரோ நகரிலேயே இந்த மம்மி கண்டறியப்பட்டது.



காபன் ரேட்டிங் அடிப்படையில் அதன் காலம் கி.மு.600 ஆம் நூற்றாண்டுகளுக்கு முந்தையது எனவும் பின்ச் கூறுகின்றார். மேலும் இதுபற்றி அவர் கூறுகையில், ''மூன்று பங்கு மரத்தாலும் மற்றும் தோலாலும் ஒரு மனிதனின் 40 சதவீத உடல் எடையைத் தாங்கக்கூடிய அளவில் அந்த வலது கால் பெருவிரல் செயற்கை முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன், இது உலகின் மிகப் பழைமை வாய்ந்த செயற்கை உறுப்பு என்ற பெருமையையும் பெறுகின்றது'' என்கிறார் பின்ச்.



எனினும், இந்த செயற்கை உறுப்புக் குறிப்பிட்ட அந்த மனிதனால் பயன்படுத்தப்பட்ட ஒன்றா? அல்லது மம்மியாக மாற்றுவதற்கென வடிவமைக்கப்பட்டதா? என்ற அடிப்படையில் ஆய்வுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி ஐயங்கள்

## பாவித்த கணினியை வாங்கும்போது...



**★ ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட 'லெப்டொப்' ஒன்றை விலைக்கு வாங்கும்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை எவை?**

◆ குறித்த கணினியைக் கொண்டு செல்வதற்கு திட்டமிட்டுள்ள பணிகளுக்கு ஏற்ப புரொஸெஸர் ரெம் மற்றும் ஹார்ட் டிஸ்க் ஆகிய பகுதிகளின் கொள்ளளவு பொருத்தமாக உள்ளதா? என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.







அத்துடன், சீடி/டீவிடி ரைட்டர், வெப் கெம், புளூடூத் வசதி, வைஃபை வசதி, கார்ட் ரிடர் ஆகியன போன்ற அத்தியாவசியமானவை உள்ளனவா? என்றும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

◆ கணினித் திரையின் அகலம், உயரம் உங்களது தேவைக்கு ஏற்ற அளவில் உள்ளதா? என்று கவனிக்க வேண்டும். அத்துடன், இத்திரையில் எல்லா இடங்களிலும் ஒரே விதமான வர்ணம் தெரிகின்றதா? என்பதையும் அவதானியுங்கள். இதன்போது திரையில் ஏதேனும் இடத்தில் வர்ணம் தெரியாமல் இருந்தால் குறித்த கணினித் திரையில் ஏதேனும் கோளாறுகள் இருக்கலாம் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

◆ 'லெப்டொப்'பின் வெளிப்புறம் (கவசப்பகுதி) ஏதேனும் நெழிவு அடையாளங்கள் காணப்பட்டால் அது ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் கீழே விழுந்துள்ளது என்பதை உணர முடியும். மேலும் கணினியின் அடிப்புறம் திருகை ஆணி (ஸ்க்ரூ) கழற்றிப் பூட்டப்பட்டிருப்பதற்கான அடையாளங்கள் இருந்தால் அது திருத்த வேலைகளுக்கு உட்படுத்தப் பட்டிருக்கலாம் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள். அத்தகைய நிலையிலுள்ள கணினி அந்தளவிற்கு நல்லதல்ல என்ற முடிவிற்கு வாருங்கள்.

◆ 'பற்றரி'யின் சேமிப்பு வலு எந்தளவிற்கு உள்ளதென்பதையும் பரீட்சித்துப் பாருங்கள். அதன் 'சேமிப்பு வலு' மிக விரைவில் தீர்ந்து போகக்கூடியதாக இருந்தால் அதற்கு புதிய பற்றரியொன்றை மாற்றுதல் வேண்டும்.

◆ குறித்த லெப்டொப்பை இயக்கச் செய்துவிட்டு குறிப்பிட்ட அளவு நேரம் கழிந்த பின்னர், அதன் பின்புறம் வெப்பத்தை வெளியேற்றும் பகுதியில் உள்ள துளைகள் உள்ள பகுதியில் கையை வைத்து வெப்பம் எந்தளவிற்கு உள்ளதெனப் பரீட்சித்துப் பாருங்கள். வெப்பம் அதிகமாக இருந்தால் அதன் குளிர்விக்கும் விசிறி உரிய வேகத்தில் இயங்கவில்லை என்பதையே காட்டுகின்றது. அல்லது அந்த விசிறியில் தூசு படிந்திருக்கக்கூடும். இத்தகைய பிரச்சினைகள் கோளாறுகள் உள்ள லெப்டொப்பை வாங்குவது அவ்வளவு நல்லதல்ல.

◆ கீபோர்டில் (Keyboard) எல்லா 'கீ'களும் சீராக தொழிற்படுகின்றனவா? என்றும் கவனியுங்கள். சீடி/டீவிடி டிரைவ் கார்ட் ரிடர் ஆகியன சரியாகத் தொழிற்படுகின்றனவா? என்பதையும் பரீட்சித்துப் பார்க்கத் தவறாதீர்கள்.

## கணினித் திரையை எவ்வாறு சுத்தப்படுத்துவது...




**★ கணினி மொனிட்டர் திரையை சுத்தப்படுத்துவதற்கு கையாள வேண்டிய வழிமுறைகள் எவை?**

◆ 'டியுப்' கொண்ட பழைய CRT ரக மொனிட்டர் ஆயின் அதன் திரையை சுத்தப்படுத்துவதற்கு பொதுவாக கண்ணாடிப் பொருட்களை சுத்தப்படுத்துவதற்குப் பயன்படுத்துகின்ற திரவங்களைப் பயன்படுத்த முடியும். அத்துடன், மென்மையான துணியொன்றின் மூலம் தூசுகளை முழுமையாக துடைத்துவிட வேண்டும். இருப்பினும் இவற்றை செய்வதற்கு முன்னர் கணினியுடனான மின்சாரத் தொடர்பைக் கழற்றிவிட மறக்காதீர்கள். மொனிட்டரின் பின்புறம் உள்ள 'பிளாஸ்டிக்' கவசத்தைக் கழற்றி சிறிய வெக்கும் கிளீனரைக் கொண்டு உட்புறம் சுத்தம் செய்ய முடியும்.



◆ இதேவேளை, தற்போது பாவனையிலுள்ள LCD திரையைக் கொண்ட கணினித் திரையை சுத்தப்படுத்துவதற்கு எந்த சந்தர்ப்பத்திலும் கண்ணாடிகளை சுத்தப்படுத்த பயன்படுத்துகின்ற திரவங்களைப் பயன்படத்தக் கூடாது. அவ்வாறே, எந்தவொரு திரவத்தையும் நேரடியாக திரையை நோக்கி ஸ்ப்ரே (Spray) செய்தல் கூடாது.

◆ உலர்ந்த மிருதுவான துணியொன்றைக்கொண்டு திரையை சுத்தப்படுத்துவதே நல்லதாகும். இத்தகைய திரைகளை சுத்தப்படுத்துவதற்கென்றே விசேட திரவம் விற்பனையில் உள்ளது. அதனை வாங்கி மிருதுவான துணியொன்றில் பூசி திரையை நன்கு துடைத்துவிட வேண்டும்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2012, ஜனவரி மாதம் 18 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No.8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday January 18, 2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org